# சம்மாந்துறை பிரதேச சபையின் 04வது சபையின் 55வது கூட்டறிக்கை 2022.09.13

சம்மாந்துறை பிரதேச சபையின் 04வது சபையின் 55வது அமர்வு 2022.09.13 ஆம் திகதி செவ்வாய் கிழமை காலை 9.30 மணிக்கு சம்மாந்துறை பிரதேச சபையின் சபா மண்டபத்தில் தேசிய கீதம் மற்றும் இறை சிந்தனையுடன் கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட் அவர்களின் தலைமையில் ஆரம்பமானது.

**சமூகமளித்த கௌரவ உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| 01. ஜனாப்.ஏ.எம்.எம்.நௌசாட் | கௌரவ தவிசாளர் | அ.இ.ம.கா |
| 02. ஜனாப்.ஏ.அச்சி முஹம்மட் | கௌரவ உப தவிசாளர் | ஸ்ரீ.சு.க |
| 03. ஜனாப்.ஐ.எல்.நஜீம் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 04. ஜனாப்.எஸ்.எம்.எம்.முஸ்தபா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 05. ஜனாப்.யூ.எல்.அஸ்வர் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 06. திருமதி.ஆர்.வளர்மதி | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |
| 07. திரு.என்.கோவிந்த சாமி | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 08. ஜனாப்.ஏ.சி.முஹம்மட் சஹீல் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 09. ஜனாப்.ஐ.எல்.எம்.மாஹிர் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 10. ஜனாப்.எம்.ரீ.பௌசுள்ளாஹ் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 11. ஜனாப்.ஏ.எம்.எம்.றியாஸ் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 12. ஜனாப்.ஏ.எல்.எம்.ஜிப்ரி | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 13. ஜனாப்.எஸ்.நளீம் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 14. ஜனாப்.ஏ.யூசுப் லெவ்வை | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 15. திருமதி.கே.எம்.இன்பவதி | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 16. திருமதி.எம்.எஸ்.சரீபா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 17. திருமதி.எஸ்.எம்.சித்தி நிலுவ்பா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 18. திருமதி.கே.எல்.சிஹாமா | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 19. திருமதி.கே.குலமணி | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |
| 20. ஜனாப்.ஏ.எச்.அன்வர் | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |

**சமூகமளித்த உத்தியோகத்தர்கள்**

| | |
|---|---|
| 01. ஜனாப்.எம்.ஏ.கே.முஹம்மட் | செயலாளர் |
| 02. திருமதி.ஏ.பீ.ஏ.சஹானா | அலுவலக உதவியாளர் |

**கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட் அவர்கள்:**
பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ராஹீம். எல்லாப்புகழும் இறைவனுக்கே, எல்லோரையும் 04வது சபையின் 55வது அமர்வுக்கு வரவேற்றவனாக,

இவ் அமர்வின் முதல் அம்சமாக சென்ற மாத கூட்டறிக்கை சமர்ப்பித்தலும் அங்கீகாரம் பெறலும். திருத்தங்கள் இருந்தால் கூறலாம். இல்லாவிட்டால் ஒருவர் ஆமோதிக்கலாம்.

| | | | |
|---|---|---|---|
| பிரேரித்தவர் | : | கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : | கௌரவ உறுப்பினர் | எம்.ரீ.பௌசுள்ளாஹ் |

கூட்டறிக்கை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கௌரவ உறுப்பினர்களே, முதலில் மறைந்த எலிசபத் மகாராணிக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம். நமது நாட்டின் ஜனாதிபதியின் பல பேச்சுக்களில் உள்ளூராட்சி மட்டத்தில் அல்லது கிராம மட்டத்தில் அபிவிருத்தி வேலைகளில் மட்டுமல்லாது நிர்வாக ரீதியிலும் மாற்றங்கள்

ஏற்படுத்த வேண்டும் என்று தொடர்ந்து பேசிக் கொண்டு வருகின்றார். நேற்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கூட்டத்தில் கூட இந்தியாவின் பிரதிநிதி இலங்கையின் அரசு 13வது திருத்தச் சட்டத்தை முழுமையாக செயற்படுத்த வேண்டும் என்ற ஒரு அழுத்தத்தை கொடுத்திருக்கும் சூழலில் உள்ளூராட்சி தேர்தல் முறையில் மாற்றங்களோடு உள்ளூராட்சி மட்டுமல்ல மாகாண சபை தேர்தலிலும் மாற்றங்களோடு உள்ளூராட்சி மன்ற தேர்தல் இந்த வருட இறுதிக்குள்ளும், மாகாண சபை தேர்தல் அடுத்த வருட ஆரம்ப காலத்திலும் நடத்தக்கூடிய சாத்தியக்கூறுகள் தென்படுகின்றது. அந்த நிலையில் நமது சபையை பொருத்தமட்டில் நமக்கு எஞ்சியிருக்கும் காலத்தில் நிதிப் பற்றாக்குறை இல்லாவிட்டாலும் நமக்கு ஊழியர் பக்கத்தில் பாரிய ஒரு சவால் ஏற்பட்டிருக்கின்றது.

இன்றய பொருளாதார சூழலில் நமது பதிலீட்டு தொழிலாளர்களில் பலர் இந்த சேவையை விட்டு வெளிநாடு செல்ல முயற்சிக்கின்றார்கள். ஏலவே 96 பதிலீட்டு தொழிலாளர்கள் இருந்தார்கள். அதில் 08 பேர் குறைந்து 88 பேர்தான் தற்போது இருக்கின்றார்கள். அதற்கு பதிலீடு செய்யுமாறு நாம் ஆளுநரிடம் பல தடவைகள் கோரியும் அவர்கள் அதற்கு எந்தவொரு பதிலும் அளிக்காத நிலையில், இந்த சபையில் நாம் ஒன்று நிரந்தர தொழிலாளர்கள் ஓய்வு பெற்றதனால் ஏற்பட்டுள்ள இடத்திற்கு தற்போது சேவையில் இருக்கும் பதில் தொழிலாளிகளை நியமிப்பதற்கும், மேலதிகமாக தேவைப்படும் பதிலீட்டு தொழிலாளர்களை அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்டிருக்கும் ஒரு இலட்சம் வேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டவர்களில் இருந்தோ அல்லது நேரடியாக சபை வழமை போல் ஆட்சேர்ப்பு செய்வதற்கு உடனடியாக அனுமதி தர வேண்டும் என்ற ஒரு தீர்மானத்தை நாம் எடுக்க வேண்டும்.

### தீர்மானம் - 04/55/01

நிரந்தர தொழிலாளிகள் ஓய்வு பெற்றதனால் ஏற்பட்டுள்ள வெற்றிடத்திற்கு தற்போது சேவையில் இருக்கும் பதில் தொழிலாளிகளை நியமிப்பதற்கும், மேலதிகமாக தேவைப்படும் பதிலீட்டு தொழிலாளர்களை அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்டிருக்கும் ஒரு இலட்சம் வேலைத் திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டவர்களில் இருந்து அல்லது நேரடியாக சபை ஆட்சேர்ப்பு செய்வதற்கும் தீர்மானம்.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.நளீம் |

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக அனுமதிக்கப்பட்டது.

### கௌரவ தவிசாளர் அவர்கள்:

ஒவ்வொரு 10ம் மாதமும் வாசிப்பு மாதமாக செயற்படும் மாதம். வாசிப்பு மாத வேலைகளில் மேற்பார்வை கடமைகளை சபை கலைக்கப்படாவிட்டால் கௌரவ உறுப்பினர்கள் பங்களிப்பது உகந்தது என்று நான் நினைக்கின்றேன். அமீர் அலி பொதுநூலகம், முகைடீன் பொது நூலகம், அஷ்ரப் பொது நூலகம், மல்வத்தை பொது நூலகம், சென்னல் வாசிப்பு நிலையம் இந்த பொது நூலகங்களுக்கு அந்தந்த வட்டாரத்தின் அங்கத்தவர்களோடு சேர்ந்து கண்காணிப்பு வேலைகளில் நீங்கள் ஈடுபட வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன். நீங்கள் உங்கள் விருப்பத்தை செயலாளருடன் தெரிவித்து அந்தந்த நூலக குழுவில் இணைந்து கொண்டு அந்த வேலைகள் ஒழுங்காக நடப்பதற்கு உதவுங்கள் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

### தீர்மானம் - 04/55/02

ஒக்டோபர் தேசிய வாசிப்பு மாதத்தினை 04 பொது நூலகங்களிலும், 01 வாசிப்பு நிலையத்திலும் கௌரவ உறுப்பினர்களின் மேற்பார்வையில் செயற்படுத்தவும், சமர்ப்பிக்கப்பட்ட அதற்கான செலவுகளை அனுமதிப்பதற்குமான தீர்மானம்.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | யூ.எல்.அஸ்பர் |

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

நாம் நீண்ட காலமாக முயற்சித்து வரும் Road Inventory முதற்கட்டமாக நாம் இருந்து சில முன்மொழிவுகளை செய்தோம். அதன் பின் பேராசிரியர் றமீஸ் அப்துல்லாஹ் அவர்களின் தலமையில் ஒரு குழு அவர்களின் சிபார்சுகளை தந்து அது அந்த படிவத்தில் பதிவேற்றப்பட்டுள்ளது. அதன் பிரதிகள் எல்லோருக்கும் தரப்பட்டிருக்கின்றது. கிடைக்காதவர்களுக்கு தரப்படும். துரிதமாக உங்களின் மட்டத்தில் நீங்கள் ஆராய்ந்து குறைந்தது ஒரு கிழமைக்குள் நாம் எல்லோரும் அடுத்த வெள்ளிக் கிழமை மீண்டும் கூடி இறுதித் தீர்மானத்தை எடுத்து அதன் பின்னர் செய்ய வேண்டிய வேலைகளை செய்து வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு ஒரு தீர்மானம் எடுத்து செயற்படுத்த வேண்டும். நாம் தீர்மானம் எடுத்து வைத்தால் செயலாளரும் அதை தொடர்ந்து செயற்படுத்தலாம். சபை கலைந்தால் செய்ய முடியாமல் இருக்கும். அதனால் இந்த சபையில் அந்த தீர்மானத்தை எடுத்து நமது காலத்தில் செயற்படுத்தினால்தான் அது பூர்த்தியடையும்.

**தீர்மானம் - 04/55/03**

கௌரவ உறுப்பினர்கள், ஊர் பிரமுகர்களால் முன்மொழியப்பட்ட Road Inventory இற்குரிய பாதைகளின் பெயர்களை கௌரவ உறுப்பினர்களின் மட்டத்தில் ஆராய்ந்து இறுதித் தீர்மானத்தை எடுத்து, அதனை வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான தீர்மானம்.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஆர்.வளர்மதி |

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

ஸ்கொட்லாந்து இலக்கிய மன்றம் நடாத்திய பேச்சுப் போட்டியில் சர்வதேச ரீதியில் இரு மாணவிகள் 3ம் இடத்தை பெற்றிருக்கின்றார்கள். அவர்களுக்கு சபை பாராட்டு தெரிவித்து கௌரவிக்கும் நிகழ்வு ஒன்று இன்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. அதே போல் சென்ற அமர்வில் கௌரவ உறுப்பினர் மாஹிர் அவர்கள் முன்வைத்த விடயத்தை அவரினாலேயே ஒரு பாகத்தை செய்து முடித்திருக்கின்றோம். அந்த மாணவனுக்குரிய விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவு செய்து அவரின் மேற்பார்வையிலே வழங்கப்பட்டது. அந்த தீர்மானத்தின் மற்றய பங்கு மைதானத்தை ஒழுங்குபடுத்துவது தொடர்பாக, அதற்குரிய உபகரணங்களை கொள்வனவு செய்து செயற்படுத்த வேண்டியதாக இருக்கின்றது.

**தீர்மானம் - 04/55/04**

ஸ்கொட்லாந் இலக்கிய மன்றம் நடாத்திய பேச்சுப் போட்டியில் சர்வதேச ரீதியில் 03ம் இடம் பெற்ற அல் - மர்ஜான் MLC, அல் - அர்ஷத் MV (தேசிய பாடசாலைகள்) மாணவிகளுக்கும், அவர்களின் பெற்றோர், பாடசாலை அதிபர், விடய ஆசிரியர்கள் என்பவர்களை தலா 10,000.00 ரூபா ஊக்குவிப்பு பரிசளிப்பு வழங்கி பாராட்டி கௌரவிப்பதற்கான தீர்மானம்.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | யூ.எல்.அஸ்பர் |

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

நமது புதிய ஜனாதிபதியின் நோக்கில் சில வேளைகளில் பிரதேச மட்டத்தில் அந்த ஆட்சி காலத்தில் பேசப்பட்ட கம்சபா திட்டம் செயற்படுத்தப்படலாம். அப்படியான ஒரு சூழலில் பிரதேச மட்டத்தில் சகல அபிவிருத்தி வேலைகளுக்கும் அந்தந்த சபையின் பங்களிப்பு இதை விட பெரிதளவில் இருக்கலாம். அதற்கு எதிர்காலத்தில் உள்ளூராட்சி நிர்வாகத்தை தொடர்ந்து செயற்பட இருக்கும் கௌரவ அங்கத்தவர்கள் தயாராகுவது நல்லது என்பது எனது கருத்து.

அடுத்ததாக செலவீனத்தை அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கின்றேன். அதில் ஏதாவது கேள்விகள் இருப்பின் கேட்கலாம். இல்லாவிட்டால் ஒருவர் ஆமோதிக்கலாம்.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, செலவீனத்தை சபைக்கு வந்து பார்த்து சொல்ல இயலாது. இதை அங்கீகரிக்கின்றோம். ஆனால் இனிவரும் கூட்டங்களில் இதை முன்கூட்டி அனுப்பினால் நல்லது என்று நினைக்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இது 2 நாளைக்கு முன்னாவது அனுப்பப்பட வேண்டும். ஆனால் இம்முறை நான் கடந்த கிழமை சபையில் இல்லாத படியினால் அது அனுப்பப்படவில்லை. நீங்கள் அங்கீகரித்துவிட்டு செயலாளரிடம் இருந்து தெளிவு காணலாம். நமது சபையில் ஒரு காலமும் செலவீனங்களை பொருத்தமட்டில் மட்டுமல்ல எந்த விடயத்திலும் ஒழிவு மறைவு இல்லை.

வருமானத்தை பொருத்தமட்டில் நீதிமன்ற தண்டப்பணம் 2021 ஆண்டு ஆகஸ்ட் மாதம் வரைக்குமான பணம் கிடைத்துள்ளது. முத்திரை தீர்வு 2021ஆம் ஆண்டுக்குரிய 06 மாதத்திற்குரியது கிடைத்துள்ளது. அந்த வகையில் நமது பணக் கையிருப்பு இருக்கின்றது.

**தீர்மானம் - 04/55/05**
சென்ற மாதம் 2022.08.01 தொடக்கம் 2022.08.31 வரையிலான செலவீனங்களும் மற்றும் கொடுப்பனவுகளுக்குமான செலவு விபரங்களுக்கு அனுமதி வழங்குவதற்கான தீர்மானம்.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.நளீம் |

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக அனுமதிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அலுவலக அத்தியவசியத் தேவைக்கு குளிர்சாதனப் பெட்டி கொள்வனவு செய்தல். இதில் பிரச்சினை என்னவென்றால் சிலநேரம் யாரும் வெளியில் இருந்து வந்தாலும் Cool Water கொடுப்பதற்கு அந்த வசதி இல்லாமல் இருக்கின்றது. நாம் சபையை விட்டு செல்வதற்கு முதலாவது ஒரு குளிர்சாதனப் பெட்டியை கொள்வனவு செய்தால் நல்லது என்று நினைக்கின்றேன். எல்லா அலுவலகத்திலும் இருக்கின்றது.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, தற்போது இருக்கின்ற எமது நிதி நிலமையை கருத்திற்கொண்டு, மின் கட்டணமும் அதிகரிக்கப்பட்டுள்ளது. இது ஒரு அத்தியவசியமான தேவை இல்லை.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
உங்களது கருத்து எனக்கு விளங்குகின்றது. நாம் குறைவான விலையில் Singer அல்லது Innovex இலாவது ஒரு குளிர்சாதனப் பெட்டியை கொள்வனவு செய்யலாம்.

**தீர்மானம் - 04/55/06**
அலுவலக அத்தியவசிய பாவனைக்காக குளிர்சாதனப்பெட்டி ஒன்றை கொள்வனவு செய்வதற்கான தீர்மானம்.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.எஸ்.சரீபா |

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக அனுமதிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நீர்ப்பாசன திணைக்களத்தினால் S வாய்க்கால் மையவாடி ஓரமாக பாதை அமைப்பு வேலைகளை செய்யும் கணரக வாகனத்திற்கு எரிபொருளும், ஏனைய செலவீனங்களையும் சபை நிதியில் இருந்து வழங்குவதற்கு உங்களின் அங்கீகாரத்தை கேட்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் S வாய்க்கால் இதில் ஏதாவது பிரச்சினைகள் இருக்கின்றதா?

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
பிரச்சினை என்றால் ஆரம்பத்தில் அவர்கள் நம்மை செய்யச் சொன்னார்கள். நாம் செய்தவுடன் சில இடங்களில் ஆழமாக தோன்றிவிட்டோம் என்று கூறினார்கள். அதன் பின்னர் நான் சொன்னேன் நீங்களே செய்யுங்கள் என்று, இதில் 02 பிரச்சினைகள் தீர்க்கப்படுகின்றது. வீரகொடையில் இருந்து வந்தால் சில்வாட மடு ஆரம்பிக்கின்ற இடத்தில் இருந்து இஸ்மாயீல் வித்தியாலயம் வரைக்கும் வடக்குப் பக்கம் ஒரு பாதை இல்லை. சிலர் சட்டவிரோதமாக கையாண்டு வைத்திருக்கின்றார்கள். 2011 ஆம் ஆண்டு இருந்து இதை ஒழுங்குபடுத்தச் சொல்லி இது நடைபெறவில்லை. மாற்றாக இந்தப் பாதையை திறந்தால் மையவாடிக்கு மற்றப்பக்கத்தில் இருந்து வருவதற்கு எந்தத் தடையும் இருக்காது. அடுத்தது அந்தக் காணி பாதுகாக்கப்படும். அந்தப் பாதைக்கும் மையவாடிக்கும் இடையில் சட்டவிரோதமாக இருப்பதை கண்காணிக்கின்ற பொறுப்பு நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கும், பிரதேச செயலகத்திற்குமுரியது. நாம் பாதையை இணைத்தால் வாய்க்கால் ஓரமாக பாதை இருக்கும். அதில் எவருக்கும் சட்டபூர்வமாக காணி உரித்தாக இருக்க முடியாது. அது State Land அதற்குரிய ஆவணங்கள் என்னிடம் இருக்கின்றது.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இதில் கனரக வாகனத்திற்கு எரிபொருளும், ஏனைய செலவீனங்களையும் சபை நிதியில் இருந்து வழங்குவதற்கான தீர்மானம். இதன் Estimate தெரிய வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
சென்ற முறை நாம் ஹயர் பண்ணி செய்தோம். கிட்டத்தட்ட ஒரு மணித்தியாலயத்திற்கு 2500.00 ரூபா டீசல் செலவளித்து செய்தோம். தற்போது ஹயர் பண்ணினால் அது பாரிய செலவு. டீசலும் சாரதிக்குரிய சாப்பாடும்தான் வரும். ஒரு மணித்தியாலயத்திற்கு எவ்வளவு டீசல் வேண்டும் என்று செயலாளரும், பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தரும் இருந்து டீசலை அடித்துக் கொடுப்பதும் சாரதிக்குரிய சாப்பாடு வழங்குவதும் தான் நமது செலவு. டீசல் கிட்டத்தட்ட 3 இலட்சம் பெறுமதி வரும்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இந்த விடயத்தில் ஏன் அக்கரை எடுக்கின்றேன் என்றால் கௌரவ உறுப்பினர் அஸ்பர் அவர்களின் முறைப்பாட்டின் படி முன்னாள் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ அவர்களது காலத்தில் ஒரு விசாரணை நடந்தது. என்னையும் அழைத்திருந்தார்கள். அதனால் தான் கூறுகின்றேன் இதில் சபை தெளிவாக இருக்க வேண்டும். ஏனைய செலவீனங்கள் என்றால் வரையறை ஒன்று இல்லை. தொகை எவ்வளவு என்று தெரியாமல் இருக்கின்றது. எத்தனை மணித்தியாலயம் என்று தெரிய வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
மணித்தியாலயம் வேலையைப் பொறுத்துதான் இருக்கின்றது.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, குறிப்பிட்டளவாவது இந்த மதிப்பீட்டிற்குள்தான் இருக்கலாம் என்று குறிப்பிட வேண்டும். இது நானோ நீங்களோ செலவளிப்பது இல்லை பொதுமக்களின் நிதி. நாம் சபையில் இருந்து சென்றுவிடுவோம். ஆனால் விசாரணை எங்களை தொடரும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இதை பொருத்தவரையில் இது பொதுமக்களுக்காக செய்யப்படுகின்ற விடயம். இதில் நான் தனிப்பட்ட முறையில் மட்டுமல்ல ஒரு பொதுமகனாக இந்த சபைக்கு வந்த காலத்தில் இருந்து சட்டவிரோதமாக நடக்கும் செயலும், குறைபாடும் நிவர்த்தி செய்யப்பட வேண்டும் என்று முயற்சி எடுத்து வந்தது ஏனென்றால் அது பொது மக்களுக்கானது. சிலர் மஜீட் MP கொடுத்த துண்டை

வைத்திருக்கின்றார்கள். அதற்கும் இதற்கும் தொடர்பு இல்லை. இதன் சரித்திரம் தெரிந்தவர்களுக்கு தெரியும். அந்த மையவாடிக்காக வளவு விட்டுக்கொடுத்த எல்லோருக்கும் சன்மானம் வழங்கப்பட்டது. நில அளவை திணைக்களத்தின் படி அது எல்லாம் State Land அது நீர்ப்பாசனத்திற்குரிய Reservation அதற்காகத்தான் நீர்ப்பாசனத் திணைக்களம் அனுமதி எடுத்து நீர்ப்பாசனத்தையே செய்ய வைப்பதற்கு காரணம் இந்த முறைப்பாடு வந்ததனால்தான் சபை செய்யப்போனவுடன் முறைப்பாடு வந்தது. நீர்ப்பாசனத்திணைக்களம் செய்யும் போது அது நீர்ப்பாசனத்திற்குரிய Reservation. நமக்கு அந்தப் பாதை தேவைப்பட்டதனால் பங்களிப்பு செய்து அதனை முடிக்க வேண்டும்.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, அது முறைப்பாடு அல்ல சிலரின் ஏற்பாடு. அந்த வேலையை அவர்கள் செய்திருந்தால் நிலத்தை அபகரிக்க முடியாமல் போய்விடும் என்பதற்காக ஏற்பாடு தான் அது. நீங்களும் MP ஆக இருக்கின்ற காலத்தில் சில்வாட மடுவை தோன்றி தற்போது இருக்கின்ற பொறியியலாளரும் முடிவு எடுத்திருக்கின்றார் கைகாட்டியின் மறுபுரம் இருக்கின்ற மடுவையும் தோன்றுவதாக, ஆனால் நாம் ஒரு விடயத்தை விளங்க வேண்டும். மஜீட்புரத்திற்கு அப்பால் சென்று பார்த்தால் அந்த வாய்க்கால் எவ்வளவு சுத்தமாக இருக்கின்றது. ஒவ்வொரு காலமும் மக்கள் குளித்துக் கொண்டிருக்கின்றார்கள். ஏன் நாமும் அந்த நடைமுறையை கொண்டு வர இயலாது. அந்த வீதி கட்டாயம் போட வேண்டும். அந்த வீதி இரு மருங்கிலும் மரங்கள் நட வேண்டும் என்று அருமையான திட்டத்தை முன்மொழிந்தவுடன் தான் நாம் எல்லோரும் ஒன்றிணைந்து சென்றோம். ஆனால் ஏதோ ஒரு வகையில் உங்களை விசாரணைக்கு எடுத்த என்னவென்றால் அங்கு வேறு முயற்சி ஒன்று நடைபெற்றது. நான் வெளிப்படையாக ஒருவருக்கு மரண வீட்டில் வைத்தே ஏசி இருக்கின்றேன். அதில் பெரிய பூங்கா ஒன்று தனிப்பட்ட பெண்கள் செல்வதற்காக அமைப்பது பல நாள் இந்த சபையில் கூறப்பட்ட விடயம்.

இதில் அவர்களிடம் மதிப்பீடு எடுத்துவிட்டு நமது தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் இருக்கின்றார்கள் அவர்களது தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் இருக்கின்றார்கள் சரியான ஒரு கணக்கை போட்டு இந்த வேலையை செய்தே ஆக வேண்டும். நமது காலத்தில் எடுத்த முயற்சிக்கு பாரிய ஒரு தடங்கள் மாதிரித்தான் அது. தற்போது நிறுத்தப்பட்டவுடன் எலும்புகளை கொண்டு போடுகின்றார்கள். அதை மீறித்தான் கைகாட்டி குளத்திற்கு தண்ணீர் செல்ல வேண்டும். அந்த தண்ணீரை எப்படி குளிப்பது. அதை தோன்டினால் அங்கு இருக்கின்ற நிலங்கள் எக்காரணத்திற்காகவும் அவர்களுக்கு என்றுதான் 20 வீட்டுத் திட்டமே கட்டப்பட்டு கொடுக்கப்பட்டது. ஒரு சிலர் நஸ்டப்பட்டாலும் இருக்கின்றதை நீர்ப்பாசன பொறியியலாளருடன் கதைத்து அதை பாதுகாக்க வேண்டும். நாம் 2011 இல் இருந்து வருகின்றோம். சபை கணக்கு விடயத்தில் எல்லோரும் கேட்போம். பிழை நடந்தால் சுட்டிக்காட்டுவது நமது கடமை. அதில் யாரும் தயங்க வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் நாம் எல்லோரும் ஒட்டுமொத்தமாக சம்மதித்து இதில் நமக்கு விவாதம் தேவையில்லை இந்த வேலையை முடிக்க வேண்டும் என்பதுதான் என்னைப் பொருத்தவரைக்கும் நான் இவ்வளவு காலமும் இருந்ததில் கனவை நனவாக்குகின்ற திட்டம் அது. அதில் எல்லோரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று கேட்டு விடைபெறுகின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நான் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த காலத்தில் முதல் DCB இலையோ முதல் காசு மஜீட்புரத்தில் இருந்து கைகாட்டி வரைக்கும் தோன்டுவதற்கு ஒதுக்கினேன். அந்த தடவை மாத்திரம்தான் தோன்றப்பட்டது. இந்த ஊரின் சரித்திரத்திற்கும் அந்த வாய்க்காலுக்கும் நீண்ட தொடர்பு சம்மாந்துறைக்கு முதல் தண்ணீர் வந்த காரணம் அந்த வாய்க்கால் தான். அதில் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் ஒரு குறிப்பு ஒன்று இருக்கின்றது. எந்த நேரமும் ஒரு இன்ச் தண்ணி அந்த வாய்க்காலில் இருக்க வேண்டும். அந்த தண்ணீர் இருந்தால்தான் அந்தப் பகுதி கிணறுகளில் ஊறும். ஆனால் அது நடைமுறையில் கைவிடப்பட்டுள்ளது. ஏனென்றால் அது பராமரிக்கப்படுவதில்லை. நாம் சபை முடிந்து வீரகொட இற்கு சென்று அதனால் வருவோம் என்றால் வெட்கித்து போவோம். சடையந்தலாவ பாலத்தை தாண்டி வர அவ்வளவும் வித்தியாசம். நமக்குள் இருக்கின்றதையாவது பாதுகாத்து செய்ய வேண்டும் என்பதுதான் எனது கருத்து. நடைமுறையில் சில சிக்கல்கள் இருந்தாலும் அதை தவிர்த்து செய்வதற்குரிய ஏற்பாடுதான் இது.

**கௌரவ உறுப்பினர் யூ.எல்.அஸ்பர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, சில்வாட மடு ஓரமாக செல்கின்ற வண்டுவாய்க்கால் சம்மந்தமாக கௌரவ உறுப்பினர் மாஹிர் அவர்கள் கோட்டபாய ராஜபக்ஷ அவர்களது காலத்தில் ஒரு விசாரணைக்கு சென்றதாக கூறினார். என்ன சம்மந்தமான விசாரணை? அதற்கு என்ன பதில் கொடுத்தார்? என்கின்ற விடயம் எங்களுக்கு தெரிய வேண்டும். அந்த நேரம் எமது சபை எடுத்த

தீர்மானத்திற்கமைவாக அந்த வேலைத்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு முதல் அதை Coordination செய்தவன் நான். அதன் போது நீர்ப்பாசன திணைக்கள பொறியியலாளர் நவாஸ் அவரிடம் தொலைபேசி மூலமாக விணவிய போது இந்த மடு எந்த ஆழத்திற்கு தோன்றப்பட வேண்டும் என்று கேட்டதற்கு அவர் தந்த பதில் அது குளம் எந்தளவுக்கும் தோன்றப்படலாம் என்று பதில் தந்தார். ஆனால் அவரது பின்புலம் அரசியலுக்கு வருவதற்காக இந்த வேலைகளை நிற்பாட்ட வேண்டும் என்பதற்காக பிரதம பொறியியலாளரை அழைத்து வந்து இது மேலதிகமாக தோன்றப்பட்டு இருக்கின்றது என்று ஒரு பிரச்சினையை உருவாக்கி அந்த வேலை நிற்பாட்டப்பட்டது. இல்லாவிட்டால் அந்த வேலை ஏற்கனவே செய்து முடிக்கப்பட்டிருக்கும்.

கைகாட்டி மடு தோன்றப்படும் போது இரண்டு வீதிக்கும் 04 பெட்டி மண் தாருங்கள் என்று கேட்டவுடன் தருகின்றேன், தருகின்றேன் என்று முழுவதையும் அவர்கள் விற்றுவிட்டார்கள். கௌரவ உப தவிசாளர் அவர்கள் கூறியது போன்று கைகாட்டி சந்தியில் இருந்து தேங்காய்பூவர குளத்தை தோன்றுவதற்குரிய ஏற்பாடு செய்வதோடு நாம் எமது சபையால் செய்ய வேண்டிய தேவை சில்வாட வண்டையும் முடித்து இந்த வண்டையும் அவர்களிடம் இயந்திரம் இருக்கின்றது. சபையால் டீசலை கொடுத்து S வாய்க்காலையும் தோன்றி அதற்குரிய மண்ணை எமது பிரதேச சபைக்குட்பட்ட பாதைகளுக்கு இட்டு செப்பனிட வேண்டும். அதற்குரிய தீர்மானம் இன்றைக்கு எடுக்க வேண்டும். அதற்குரிய நடவடிக்கையை எழுத்து மூலமாக எங்களுடைய தவிசாளர் அதை முன்னெடுத்து அவசரமான தீர்மானத்தை செய்ய வேண்டும்.

சில்வாட மடு ஓரம் இருக்கின்ற பண்ட் செய்கின்ற நேரம் பாரிய மலை மதில் ஓரத்தில் இருந்தது என்னுடைய சொந்தக் காசில் கொடுத்து குழி அடித்து உடைத்தேன். உங்களுக்கு என்ன விசாரணை வந்து என்ன சம்மந்தமாக பேசின? நான் தான் அவருக்கு நடவடிக்கை எடுத்த. அவர் கட்சி வேதம் பார்த்து செய்த வேலையை நிறுத்தி இருக்கின்றார். இவர் செய்ய வேண்டிய வேலையை சபை செய்கின்றது. இவர் இது வரைக்கும் என்ன செய்திருக்கின்றார் என்று கேட்டு நான்தான் அவருக்கு நடவடிக்கை எடுத்தேன். அது சம்மந்தமாக உங்களை விசாரணை செய்து எந்த இடத்திற்கு அழைத்து என்ன பதில் கொடுத்தீர்கள்? அது எங்களுக்கு தெரிய வேண்டும். கூட்டறிக்கையில் வருவதற்காக பேசாமல். மக்களுக்கு உண்மையை பேச வேண்டும். மக்களின் தேவையை பேச வேண்டும். மக்களின் அவாக்களை பேச வேண்டும். நாங்கள் இங்கு ஒருவரும் கொள்ளை அடித்துக்கு போவதற்கு வரவில்லை. நான்தான் தவிசாளரை உற்சாகப்படுத்தினேன். அவர்களிடம் இயந்திரம் இருக்கின்றது அதற்கு டீசலை கொடுப்போம். தற்போது ஹயர் பண்ணுவதற்கு பணம் இல்லையே. இந்த வேலையை செய்து முடிக்க வேண்டும். இதற்கு முதல் காலம் அவர் என்ன செய்தார் இவர் என்ன செய்தார் என்று கேட்கின்ற காலம் இல்லை. தற்போது சிந்திக்கத் தொடங்கிவிட்டார்கள்.

05 வருடம் இந்த சபை இருந்தது. நாங்கள் எதை செய்திருக்கின்றோம். நிரந்தரமான வேலைகள் எது செய்திருக்கின்றோம். குப்பைகளை எடுப்பது, மின்விளக்குகள் பொருத்துவது எல்லாம் சபை இருந்தாலும் இல்லாவிட்டாலும் செயலாளர் மூலமாக செய்யலாம். நாங்கள் மக்கள் பிரதிநிதிகள் சபை இந்த ஊருக்கு என்ன எடுத்துக்காட்டான நிரந்தரமான வேலையை செய்திருக்கின்றது. S வாய்க்கால் தோன்றுவதுடன், தேவையான வட்டாரங்களின் பாதைகளுக்கு மண் இட்டு செப்பனிட வேண்டும் என்று ஒரு தீர்மானத்தை எடுக்க வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

S வாய்க்கால் விடயத்தைப் பற்றி சபைக்கு அப்பால் தனிப்பட்ட முறையில் 2012ம் ஆண்டு கூட எழுதினேன். S வாய்க்காலின் கிழக்குப்புரம் S29 தற்போது வடிச்சலுக்காக மட்டும்தான் பாவிக்கப்படுகின்றது. பாய்ச்சலுக்காக அல்ல. அந்தக் குளத்தை தவிர மற்ற வாய்க்கால் அவ்வளவும் வடிகானாக பிரதேச சபைக்கு பாரம் அளிப்பதற்கு நான் வேண்டுகோள் விடுத்தேன். ஒவ்வொரு தடவையும் வெள்ளம் வந்தவுடன் வீடுகளுக்குள் தண்ணீர் பரவுகின்றது. சட்டவிரோதமாக அந்த வளவுகள் ஒன்றுக்கும் இந்த வாயக்கால் பக்கத்தில் வழி இல்லை. ஆனால் பல பேர் வளவுகளை பிரித்து பிரித்து வழி எடுத்து விட்டார்கள். அதனால் அந்த வாய்க்கால் ஒழுங்கு செய்யப்பட வேண்டும். அந்த முறைப்பாடு ஒன்று சென்ற கிழமை பிரதேச செயலகத்தில் இருந்து நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு செய்யப்பட்டது. அதன் விளைவுதான் தோன்றுவதற்குரிய ஏற்பாடு. மண் தேவையை உத்தியோகபூர்வமாக அறிவிப்போம். அவர்கள் ஒரு Contract கொடுப்பது எப்படியென்றால் தோன்றுவதற்கு செலவு கொடுப்பதில்லை. அதில் வருகின்ற மண்ணை விற்றுதான் அந்த செலவை கொடுப்பது என்று சென்ற முறை அரசாங்கம் கூட குளங்கள் அபிவிருத்திக்கு எடுத்த முடிவு. அதற்கு மாறாக இருக்குமானால் அதில் வருகின்ற மண்ணை சபையின் பாவனைக்காக தர வேண்டும் என்று கேட்போம்.

**கௌரவ உறுப்பினர் யூ.எல்.அஸ்பர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, தற்போது பணம் இருந்தாலும் மண் எடுக்க முடியாத சூழ்நிலையில் இருக்கின்றோம். அவர்கள் தோன்றுவதற்கு காசு இல்லை மண்ணை பெற்றுக் கொள்ளுங்கள் என்ற ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்ள முடியாது. இரண்டு பேரும் செலவளிப்போம். நீங்கள் இயந்திரத்தை தாருங்கள் நாங்கள் டீசல் வழங்குகின்றோம். மண்ணை நாங்கள் பாவிக்கின்றோம் என்ற கருத்தை தெரிவிக்க வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
பேசிப் பார்ப்போம்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கௌரவ உறுப்பினர் அஸ்பர் அவர்கள் தவறாக விளங்கிக் கொண்டார். நான் அவரை கமிஷன் அடித்தயோ கொள்ளை அடித்தயோ என்று கூறவில்லை. அவருக்கு ஆதரவாகத்தான் பேசினேன். அவரது முயற்சி. அவர் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில்தான் விசாரணை நடந்தது. அவர் அந்த முறைப்பாட்டை செய்யாமல் விட்டிருந்தால் அந்த விசாரணை நடப்பதில்லை. ஆகவே நான் எங்கு போனேன்? யாருக்கு முறைப்பாடு கொடுத்தேன் என்பதை மற்றவர்களுக்கு சொல்ல வேண்டிய அவசியம் இல்லை.

## தீர்மானம் - 04/55/07

நீர்ப்பாசன திணைக்களத்தினால் S வாய்க்கால் மையவாடி ஓரமாக பாதை அமைப்பு வேலைகளை செய்யும் கணரக வாகனத்திற்கு எரிபொருளும், சாரதிக்கு தேவையான உணவும் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் மதிப்பீட்டின் அடிப்படையில் சபை நிதியிலிருந்து வழங்குவதற்கான தீர்மானம்.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உப தவிசாளர் | ஏ.அச்சி முஹம்மட் |

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக அனுமதிக்கப்பட்டது.

## தீர்மானம் - 04/55/08

S 29 வாய்க்கால் தற்போது நீர்ப்பாய்ச்சல் நடவடிக்கைகளுக்கு பயன்படாத காரணத்தினால் அதனை சபைக்கு பாரமளித்து, கழிவு நீரை ஓடவைக்க ஒழுங்காக தோன்றப்பட்டு பராமரிக்க சபைக்கு உத்தியோகபூர்வமாக வழங்க வேண்டும் என்று நீர்ப்பாசன திணைக்களத்திற்கு அறிவிப்பதற்கான தீர்மானம்.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | யூ.எல்.அஸ்பர் |
| ஆமோதித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக அனுமதிக்கப்பட்டது.

## தீர்மானம் - 04/55/09

பிரதான காரியாலய Generator மற்றும் Finger Print இயந்திரங்களின் மின்கலங்கள் பழுதடைந்துள்ளதானால் புதிய மின்கலங்கள் கொள்வனவு செய்வதற்கான தீர்மானம்.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | கே.குலமணி |

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக அனுமதிக்கப்பட்டது.

## தீர்மானம் - 04/55/10

அமீர் அலி பொது நூலகத்தின் விரிவுரை மண்டபத்திற்கு 55" அளவிலான Digital Board Smart TV கொள்வனவு செய்வதற்கான தீர்மானம்.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.எம்.எஸ்.நிலுவ்பா |

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக அனுமதிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/55/11**

LE – 7441 இலக்க வாகனத்தின் முன் டயர்கள் மாற்றம் செய்வதற்கான தீர்மானம்.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ.பௌசுள்ளாஹ் |

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக அனுமதிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/55/12**

CC/128/IMT/91 இலக்க வாகனத்தின் முன் டயர்கள் மாற்றம் செய்வதற்கான தீர்மானம்.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | என்.கோவிந்தசாமி |

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக அனுமதிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

சென்னல்கிராமத்தில் உள்ள சந்தை வளவு நான் நினைக்கின்றேன் கிட்டத்தட்ட அண்ணளவாக ¾ ஏக்கர், 20 பேர்ச் (3 Root 18.75 பேர்ச்). அதில் டயலொக் நிறுவனம் அந்த பிரதேசத்தில் Coverage போதாது என்று அதன் தெற்குப் புறத்தில் ஒரு Tower அமைப்பதற்கு ஒரு வேண்டுகோள் விடுத்தார்கள். நான் சொன்னேன் இந்தக் காணி இன்னும் அரச காணியாகத்தான் இருக்கின்றது. Tower அமைப்பது என்றால் 20 பேர்ச் கொடுக்க வேண்டும். அவ்வாறு கொடுத்தால் எஞ்சும் காணியில் நாம் செய்ய விரும்புகின்ற சந்தை அபிவிருத்திக்கு போதுமானதாக இருக்குமா என்ற ஒரு கேள்வி இருக்கின்றது. அடுத்தது இதை கொடுப்பதால் 2 நன்மை வருகின்றது. ஒன்று அந்த பிரதேசத்தில் Coverage இல்லாததனால் இதை அமைத்தால் அங்கு இருக்கின்ற பிள்ளைகளுக்கு Zoom Class படிப்பதற்கு இலகுவாக இருக்கும். அடுத்தது சபைக்கு ஒரு வருமானம். அவர்கள் 30000.00 ரூபா சொல்லிருக்கின்றார்கள். அது என்னைப் பொருத்தவரைக்கும் போதாது. இந்தக்காணியில் தெற்குப் புரத்தில் 20 பேர்ச் காணியை டயலொக் நிறுவனத்திற்கு 10 வருட வாடகைக்கு கொடுப்பதைப் பற்றி உங்களின் அபிப்பிராயம்.

**கௌரவ உறுப்பினர் யூ.எல்.அஸ்பர் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, இது சம்மந்தமாக என்னைப் பொருத்தவரைக்கும் பிரதேச சபைக்கான வருமானத்தைதான் முதல் நோக்க வேண்டும். எதிர்காலங்களில் சந்தை அமைப்பதில் 20 பேர்ச் இல் 4 கடையறை கட்டலாம். இருந்தாலும் தற்போது அம் மக்களின் கல்வியை Zoom இல் கற்பதை பார்க்கும் போது அது ஒரு நலவு ஒன்று. அடுத்தது சபைக்கு வருமானம். நிரந்தர வருமானம் ஒன்றை கைவிட இயலாது. நாம் கூடுதலாக அதிகரித்து கேட்கலாம். அதை ஒரு முடிவாக எடுப்போம் என்பது எனது அபிப்பிராயம்.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, அவர்கள் பாடசாலையின் முன் பக்கத்தை எடுக்க இயலாது. அதன் பின் பக்கத்தைதான் எடுக்க வேண்டி வரும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

நான் பரிந்துரை செய்தது 2 இடம். ஒன்று நூலகத்திற்கு பின்னால். அது போதாது. இதில் ஏதாவது செய்வது என்றால் தெற்குப் புரத்தில்தான் செய்யலாம். ஆனால் அவர்கள் தெற்குப் புரம்தான் வேண்டும். அந்தப் பிரதேசம் தான் அவர்களது Point வருகின்றது.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, தனியாரும் கொடுப்பதற்கு முயற்சித்து எடுத்திருக்கின்றார்கள் Point பிரச்சினையால் அது சரிவரவில்லை. நமது இடம் பொருத்தம் என்றால் தற்காலிகமாவது கொடுக்கலாம். அங்கு இருக்கின்ற வேலி, கேட் இருக்கின்றது. அதனை நிரந்தரமாக சீமெண்ட் கல்லால் கட்ட வேண்டும். ஆடு மாடு மேய்ப்பவர்கள் அவர்களுக்கு ஏற்ற மாதிரி பலகைகள் வைத்திருக்கின்றார்கள். நமது தொழில்நுட்ப உத்தியோகத்தர்களைக் கொண்டு நிரந்தரமாக அமைக்க வேண்டும். தற்போது நிலங்களை தரிசாக விட இயலாததை பொருத்து அதை உழவி ஏதாவது பயிர் செய்யலாம். அதில் பல வருமானங்களை பெறலாம். எத்தனையோ கோடி கொடுத்தாலும் வாங்க இயலாத ஒரு இடம்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இது நல்ல ஒரு திட்டம். வருமானம் தரக்கூடிய வழிகள். அந்த திட்டத்தை சந்தை வளவு இல்லாமல் நூலகத்திற்கு சொந்தமான இடத்தில் அமைத்தால் என்ன?

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அதைத்தான் நான் சொன்னேன். ஆனால் அவர்களது Point காட்டுவது அந்த பிரதேசம்தான். அவர்கள் தனியார் நிலங்களையும் பார்த்திருக்கின்றார்கள். நான் சொன்னேன் 40 வீட்டு மலையில் அமைக்கலாம் என்று, அவர்கள் சொன்னார்கள் இந்த இடம்தான் அதற்கு பொருத்தமானது. நாங்கள் இந்த இடத்தை சந்தை அமைப்பதற்காக தீர்மானித்திருக்கின்றோம். சபையின் தீர்மானப்படிதான் அதை செய்யலாம் என்று கூறினேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, எதிர்காலங்களில் நாம் ஏதாவது ஒரு திட்டம் செய்யும் போது அது தடையாக வராதா?

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அதற்காகத்தான் நான் கேட்கின்றேன். இது 10 வருடத்திற்கு கொடுக்கப்படுவது.

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ்.சரீபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இந்த விடயம் சம்மந்தமாக முதன் முதலில் டயலொக் நிறுவனம் இடத்தை கேட்டது என்னிடம்தான். எனது சகோதரியின் வளவு நூலகத்திற்கு பின்னால் இருக்கின்றது. நான் சொன்னேன் சந்தை வளவில் சந்தை அமைக்கப்படாமல் இருக்கின்றது. எங்களது தவிசாளரை சந்தித்து கேளுங்கள் என்று, எனக்கு அந்த Point அனுப்பி இருந்தார் அந்த வளவின் பின்புரம்தான் அந்தப் Point இற்கு அமைந்தது. அதில் 03 Tower அமைக்கப்படுகின்றது. அதில் சிறியது ஒவ்வொன்றுக்கும் 30,000.00 ரூபாவும், பெரியதற்கு 45,000.00 ரூபாவும் தருவதாக. அதை விட நில வாடகை வேறாக 45,000.00 ரூபா தருவதாக கூறினார்கள். நான் சொன்னேன் சபை என்றதால் கூட்டி எடுக்கலாம். சபையால் சரி என்று சொன்னால் அதில் மேலதிகமாக 5000.00 ரூபா கூட்டலாம் என்று சொன்னார். 03 Tower இற்கும் 75,000.00 ரூபா வரும். நில வாடகை 45,000.00 வருகின்றது. எப்படியும் 100,000.00 இற்கு மேலாக வருமானம் வருகின்றது. அதை இன்னும் கூட்டி எடுப்பது நல்லது என்று நினைக்கின்றேன். எனக்கும் அவ்விடத்தில் வளவு இருக்கின்றது நாங்களும் கொடுக்கலாம். ஆனால் நான் நினைப்பது என்னவென்றால் நாங்கள் சென்றாலும் இப்படியான ஒரு வருமானத்தில் எல்லோரும் வாழலாம் என்பதை உள்நோக்கித்தான் செய்தது.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, Tower சம்மந்தமாக பொறியியலாளர் றிப்கான் என்பவர் கம்பளையை சேர்ந்தவர். நாம் அவரிடம் கலந்துரையாடி Point களை மாற்றக் கூடிய அமைப்புகள் இருந்தால் அதை மாற்றி நூலகத்திற்குள் கொண்டு வரலாம் என்று நினைக்கின்றேன்.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நீங்கள் கூறிய 40 வீட்டு மலை பாடசாலையில் இருந்து குறிப்பிட்ட தூரம் அவர்களுக்கு இடைவெளி தேவை. பாடசாலை நமக்கு பொது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நாம் Expert Advise கேட்பது நல்லது. ஆனால் கொள்கை ரீதியில் நாம் ஒரு முடிவு எடுத்துவிட்டு அதன் பின்னர் செய்யலாம்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, டயலொக் Tower சம்மந்தமாக எனக்கு எத்தனையாவது சபை அமர்வு என்று ஞாபகம் இல்லை. இந்த சபையின் ஊடாக வலியுறுத்துவதற்கு நான் ஒரு பிரேரணையாக கொண்டு வந்து இந்த சபையில் சமர்ப்பித்திருந்தேன். இன்று அந்தப் பிரதேசத்தினுடைய தேவை கட்டாயமாக Tower ஒன்று தேவை. அது எந்த வலையமைப்பாக இருந்தாலும் அந்தப் பிரதேசத்திலே Coverage மிகவும் மோசமான நிலையில் இருக்கின்றது. இன்று இருக்கின்ற கணனி தொழில்நுட்பங்களை இலகுவாக பெற்றுக்கொள்வதற்கு மிகவும் சிரமப்படுகின்றார்கள் அங்கு இருக்கின்ற மாணவர்கள். அதே நேரம் இந்த சபைக்கு சொந்தமான வளாகத்தில் பாரிய திட்டங்களையும் கடந்த காலங்களில் முன்வைத்திருந்தோம். நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலைகள் காரணமாக தங்களால் அதனை பெற்றுக் கொள்ள

முடியாமல் போயிருந்ததும் எமது துரதிஸ்டம். எனவே அந்தப் பிரதேசம் மக்கள் மிகவும் செழிப்பாக எதிர்காலத்தில் வாழக்கூடிய ஒரு பிரதேசம். ஆங்காங்கே மக்கள் தற்போது குடியேறிக் கொண்டு செல்கின்ற பிரதேசமாக இருக்கின்ற படியினால் அதனுடைய எதிர்காலத்தை சரியாக திட்டமிட்டு எந்தவொரு அபிவிருத்தியாக இருந்தாலும் அங்கு செய்ய வேண்டும். கடந்த காலங்களிலே செய்யப்பட்ட அபிவிருத்திகள் இன்று மக்களுக்கு பிரயோசனமற்ற நிலையில் பல வேலைகள் செய்யப்பட்டிருக்கின்றது. எனவே இதனை நிறுவுவதன் ஊடாக சபைக்கு வருமானம் வரும் என்று சபை ஊடாக மக்களுக்கு தேவையான தேவையை பூர்த்தி செய்கின்றோம். ஆனால் எங்களுடைய பாதகங்கள் என்ன என்கின்ற மறுபக்கத்தையும் யோசிக்க வேண்டும். தற்போது அதனை அண்மித்த பகுதிகளில் ஒரு சில குடும்பங்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். நான் நினைக்கின்றேன் நாங்கள் திட்டமிடுகின்ற 10 வருடத்திற்குள் அப் பிரதேசம் பாரிய நகரமாக மாறக்கூடிய பிரதேசமாக மாறிவிடும். எனவே இதில் இருந்து ஏற்படும் பாதகமான விடயங்கள் என்ன என்பதை சரியாக திட்டமிட்ட பின்னர் ஒரு தீர்மானத்தை எடுத்து வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன். ஆனால் கட்டாயமாக அப் பிரதேசத்திற்கு Tower தேவை.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, சென்னல் கிராமத்தின் சந்தை, அம் மக்கள் சந்தை வசதிக்காக மிக நீண்ட தூரம் பயணிக்க வேண்டி இருக்கின்றது. விளினியடி சந்திக்கு அல்லது ஹிஜ்ரா சந்திக்கு வர வேண்டும். கம்பெரலிய வேலைத் திட்டத்தின் கீழே 75 இலட்சம் ரூபா செலவிலே சந்தை அமைப்பதற்காக முயற்சி செய்த போது பணமும் எங்களிடம் இருந்தது. ஆனால் எதிர்கால நலனை யோசித்து கிட்டத்தட்ட 2 கோடி 25 இலட்சம் செலவிலே ஒரு சந்தை அமைப்போம் என்று அடுத்த வருடம் செய்வோம் என்ற போது துரதிஸ்டவசமாக பணம் கிடைக்கப்பெறவில்லை. இருக்கின்ற நிலத்தை நாங்கள் வேறு தேவைக்காக ஒதுக்கி விட்டு நிதி கிடைக்கின்ற போது இடம் தேடி அலைய வேண்டிய சந்தர்ப்பமும் ஏற்படும். அந்த மக்களுக்கு சந்தை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அவர்களுக்காக மாத்திரம் அல்ல வெளியூர்களிலே இருந்து தென்கிழக்குப் பல்கலைக்கழக விடுதியிலே வசிக்கின்ற மாணவர்கள் கூட சந்தை வாயப்பிற்காக விளினியடி சந்தி அல்லது ஹிஜ்ரா சந்திக்கு வர வேண்டிய தூர துரதிஸ்டவசமான சூழ்நிலை இருப்பதால், அந்தப் பிரதேசத்திலே Tower உம் அமைக்கப்பட வேண்டும் அத்தியவசியம், சந்தைக்கும் இடம் தேவை எனவே இருக்கின்ற இடத்தை நாங்கள் வேறு தேவைகளுக்காக ஒதுக்கி விட்டு நிதி கிடைக்கின்ற போது இடம் தேடி அலைய வேண்டிய சூழல் ஏற்படாமல் மிகவும் நிதானமாக யோசித்து முடிவு எடுக்க வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எல்.எம்.ஜிப்ரி அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கருவாட்டுக்கல் - 01 இல் அம்பாரை 9ம் வீதியில் நாசர் என்பவர் இந்த சபையையும் சபையில் இருக்கின்ற அங்கத்தவர்களையும் அவதூராக கதைத்துக் கொண்டு போகின்றார். அவர் கேட்பது சரியா? அல்லது தவறா? என்பதை இந்த சபையில் முடிவு எடுத்தால் நல்லது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அதற்கு நான் பிறகு பதில் தருகின்றேன். Tower விடயத்தில் எனக்கும் அந்த கருத்து இருந்தது நமக்கு ஒரு திட்டம் வரும் போது ஒன்றும் இருக்காது என்று, அதே நேரம் நிதி கையாளும் முறையில் இந்த முறை வரவு செலவுத் திட்டம் தயாரிப்பது கூட பாரிய சவால். செலவை குறைக்கின்ற அளவுக்கு குறைத்திருக்கின்றது. வருமானம் நான் இந்த சபையில் வாழ்த்த வேண்டும் வரி அறவீடு செய்கின்ற 02 பேரையும். இன்றைக்கு கிட்டத்தட்ட 07 மில்லியன் ஒரு வருடத்திற்குள் அறவீடு செய்திருக்கின்றார்கள். இரண்டு பேரும் போட்டிக்கு ஊருக்குள் சென்று மாதாந்தம் அறவீடு செய்கின்றார்கள். வேறு வருமானங்கள் இறைச்சிக் கடையின் வருமானம் எல்லாரும் கூறுகின்றார்கள் Tender காசாலதான் இறைச்சி விலை போகின்றது என்று. இது உண்மைக்கு முரணான விடயம். அவர்கள் விற்கின்ற ஒவ்வொரு கிலோவிற்கும் 50 ரூபா தான் வருகின்றது. சென்ற சபையிலும் கூறினேன். சபையின் வருமானத்தை கூட்டுவது என்றால் ஒன்று வளங்களை வைத்துதான் கூட்ட வேண்டும். அல்லது மக்களிடம் அறவிட வேண்டும். நம்மிடம் இருக்கின்ற வளங்கள் நில வளங்கள் இருக்கின்றது. அவ்விடத்தை கேட்டவுடன் நான் சொன்னேன் நூலகத்திற்கு பின்னால் அமைக்கலாம் என்று, Coordinator சொன்னார் இந்த Point இல்தான் மிகவும் தரமான இடமாக காட்டப்படுகின்றது. அதை சுற்றி இருக்கின்ற வளவுகளை பார்த்தோம் அந்த வளவுகள் போதாது. இது பொருத்தமான இடம். தேவை ஒன்றும் இருக்கின்றது. இடமும் இருக்கின்றது. ஆனால் கௌரவ உறுப்பினர் மாஹிர் அவர்கள் பிற்காலத்தில் நமக்கு ஒரு அபிவிருத்தி வருகின்ற நேரம் அதற்கு தடையாக இருக்குமா? நாம் தொழில்நுட்ப கருத்துகளையும் உள்வாங்கி ஆகக்குறைந்தது எவ்வளவு இடத்தை கொடுத்து செய்விக்கலாமோ அதற்குரிய நடவடிக்கைகளை எடுப்போம். அதற்கு தடையாக வரும் என்றால் அதனை மீள பரிசீலிப்போம்.

**தீர்மானம் - 04/55/13**

சென்னல் கிராமம் - 02 சந்தை வளவின் தெற்குப் புரத்தில் Dialog Tower அமைப்பது தொடர்பான தொழில்நுட்ப கருத்துகளை உள்வாங்கி அதன் பின்னர் பொது மக்களின் கருத்துக்களைப் பெற்று அனுமதி வழங்குவதற்கான தீர்மானம்.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எம்.எம்.றியாஸ் |

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக அனுமதிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

கௌரவ உறுப்பினர் ஜிப்ரி அவர்கள் கூறிய நாசர் என்பவரின் பிரச்சினை நீண்டகாலத்து பிரச்சினை. தனிப்பட்ட 2 குடும்பங்களுக்குள் இருக்கின்ற பிரச்சினை. அந்தப் பிரச்சினையை பல கௌரவ உறுப்பினர்கள் கதைத்திருக்கின்றார்கள். சென்ற ஞாயிற்றுக் கிழமை கௌரவ உறுப்பினர் அஸ்பர் கேட்டதால் நான் அவருடன் மீண்டும் பேசினேன். இந்த விடயத்தை பொருத்தமட்டில் இரண்டு சகோதரிகள் ஒரு வளவு பிரிக்கப்பட்டு மூத்த சகோதரிக்கு பின் வளவும் இரண்டாவது சகோதரிக்கு முன் வளவும் ஆகும். இரண்டாவது சகோதரியை திருமணம் முடித்தவர்தான் நாசர். அவர் பிரதேச சபை தேர்தல் காலத்தில் எனக்கு மும்மூரமாக வேலை செய்தவர். அவர் அந்த வளவில் வீடு கட்டி முன்புரத்தை கடையாக்கி கேட் எடுத்து வீடு கட்டியிருந்தார். அந்த நேரம் ஆட்சேபணை இருந்திருந்தால் அது கட்டப்பட்டு இருக்காது. இரண்டு குடும்பங்களும் அந்நியோன்னியமாக வாழ்ந்து வந்த காலம்.

அதற்கு பின்னர் இவர் டயலொக் Tower இற்கு விண்ணப்பம் ஒன்று செய்திருந்தார். அது அமைப்பது என்றால் அதனைச் சுற்றி இருப்பவர்களிடம் அனுமதி இருக்க வேண்டும். அந்த சம்மதம் எடுப்பதில் அதைச் சுற்றி இருந்த சிலர் அனுமதிக்காததால் நமக்கு Tower இற்கு அனுமதி கொடுப்பது பிரச்சினையாக வந்தது. அதன் பின்னர் அதனை பிரச்சினையாக்கி சிலர் UDA இற்கு எழுதி பிரதேச சபை அந்த வீட்டுக்கு COC கொடுத்திருக்க முடியாது என்ற ஒரு வாதத்தை எடுத்தார்கள். அதன் பின்னர் UDA சொன்னார்கள் COC நீங்கள் கொடுக்க இயலாது நாங்கள்தான் கொடுக்க வேண்டும். COC இல்லாவிட்டால் Tower வர இயலாது. இது இப்படியோ நீடித்து அதில் எதிர்த்தவர்களில் மூத்த சகோதரியின் கணவர் நமது சபையில் வேலை செய்கின்ற சாரதி ஜாபிர் அவர்களின் மூத்த சகோதரர். அதனால் சபை அவருக்கு சார்பாக செயற்படுகின்றது என்று ஒரு குற்றச்சாட்டு வந்தது. மூத்த சகோதரி அவர்கள் சட்டவிரோதமாக வீடு கட்ட ஆரம்பித்தார்கள். ஆட்சேபணை தெரிவித்தார் நாசர். நாங்கள் கட்டடம் கட்டுவதை நிறுத்தி கட்டட அனுமதிப்பத்திரத்திற்கு விண்ணப்பிக்கச் சோன்னோம். இது போட்டவுடன் பாதை யாருக்குரியது என்று தீர்மானிக்க வேண்டிய கட்டம் கட்டட அனுமதிப்பத்திரம் அனுமதிப்பதற்கு, இவை எல்லாம் பேமிட் காணிகள். அதனால் பிரதேச செயலகத்திற்கு எழுதப்பட்டது இந்தப் பாதையைப் பற்றி அறிவித்தல் தருமாறு கேட்டிருந்தோம்.

நான் நினைக்கின்றேன் கௌரவ உறுப்பினர்கள் குழுவாக சென்று விசாரணை நடாத்தி முடிவுக்கு வந்தாலும் அதனை நடைமுறைப்படுத்துவதற்கு சட்டப்பிரச்சினை இருந்ததால் இந்தப் பாதை யாருக்குரியது என்று பிரதேச செயலகத்திற்கு எழுதப்பட்டது. பிரதேச செயலகம் இந்தப் பாதை பின் வளவுக்குரியது என்று கூறினார்கள். வீடு கட்டுகின்ற நேரம் சண்டை ஏற்பட்டு நீதிமன்றத்திற்கு சென்று அங்கு ஒரு தீர்ப்பு ஒன்று இருக்கின்றது. அவர் வீடு கட்டலாம், இந்த எல்லையில் இருந்து இப்படித்தான் கட்ட வேண்டும் என்று, இதில் நாசரின் முறைப்பாடு என்னவென்றால் அவரை பழிவாங்குவதாக இந்த சபை அவருக்கு பக்க சார்பாக நடக்கின்றது. இது என்னைப் பொருத்தமட்டில் பழிவாங்குவதற்கு எந்தக் காரணமும் இல்லை. நாசர் எனக்கு ஆதரவளித்தவர். மற்றப்பக்கம் நமது ஊழியரின் சகோதரர். இதன் அடிப்படை ஆரம்பத்தில் வீட்டிற்கு அனுமதி கொடுக்கும் போது அந்தப் பாதையில் முகப்பு ஒன்று முன் வீட்டுக்கு கொடுத்திருக்க முடியாது. பின் வளவின் சம்மதம் இல்லாமல் கொடுக்க இயலாது. ஆனால் பின் வளவுக்காரர்களின் சம்மதத்தோடு செய்யலாம்.

இதற்கு பிரச்சினை வருவதற்கு காரணம் பிரதேச செயலகம். பேமிட்களை பிரித்து வழங்கும் போது Partition Plan பற்றி கவனம் எடுப்பதில்லை. அதில்தான் பல பிரச்சினைகள் வருகின்றது. கௌரவ உறுப்பினர் சரீபா அவர்களின் பிரச்சினை இதுதான். ஒரு வளவு பிரிக்கப்படுவது என்றால் Partition Plan எழுதப்பட்டு இது யாருக்குரியது. யார் என்ன செய்யலாம் என்று தெளிவாக விளங்கப்படுத்த வேண்டும். பாவிக்கலாம் என்பதற்கு உரிமை கோர இயலாது. ஒருவர் சிறிய கேட் இனை வைத்து நடைபாதையாக பாவிக்கலாம். ஆனால் வீட்டிற்குமுகப்பு வைத்து வாகனத்தை போட்டால் மற்றவர் அதனால் செல்ல இயலாது. அதனால்தான் இந்தப் பிரச்சினைகள் வருகின்றது. நான் சொன்னேன்

உங்களது குற்றச்சாட்டுப்படி இதற்கு தீர்வு காண்பது என்றால் நீங்கள் நீதிமன்றத்திற்கு செல்லுங்கள். நீதிமன்றம் எல்லாவற்றையும் உள்வாங்கி சபை பிழை செய்திருந்தால் சபை நடவடிக்கைகளை திருத்தச் சொல்லும். நீங்கள் பிழை செய்தால் அதை திருத்தும். நீங்கள் குற்றம் சாட்டத் தேவையில்லையே. நீங்கள் நீதிமன்றத்திற்கு செல்லுங்கள். அவர்களுக்கு நீதிமன்றம் செல்வதற்கு விருப்பம் இல்லை. நான் என்னுடைய ஆதரவாளர் என்றோ பார்ப்பதில்லை. இது தனிப்பட்ட பிரச்சினை. மூத்த சகோதரியின் மகளை ஒருவர் திருமணம் செய்திருக்கின்றார். அவர் விட்டுவிட்டு போனது வழிப் பிரச்சினைக்கு தீர்வு காணவில்லை என்று, நான் தொடர்ந்து சொல்லி இருக்கின்றேன் இந்தக் கதிரையில் இருக்கும் வரைக்கும் அரசியல் சொந்த பந்தந்திற்கு இடம் இல்லை. நாளைக்கு நீதிமன்றத்திற்கு அழைக்கப்பட்டால் நான் இவர் எனக்கு ஆதரவளித்தார் அதற்காக இந்தத் தீர்மானம் எடுத்தது என்று சொல்ல இயலாது. நான் சட்டத்திற்குள் தான் செய்யலாம்.

உதாரணத்திற்கு மல்வத்தை சந்தியில் பெரிய ஒரு வளவு தற்போது கடை வைத்து வாழ்பவர்கள் ஒரு குடும்பம். அந்தக் குடும்பத்தில் ஒரு பகுதி ஆட்கள் உறுதி எடுத்துவந்து Street line certificate கேட்டார்கள். நாங்கள் அவர்களின் Certificate இனை எடுத்து கிராம சேவகரையும் அழைத்து சென்று அந்த வளவில் இருப்பவர்கள் ஒரு ஆவணத்தை காட்டி இந்த உறுதி இருக்கின்றது. அதே உறுதியை வைத்துதான் இவர்களும் அதற்கு மேலாக உறுதியை எழுதி Street line application இற்கு போட்டார்கள். நாங்கள் சமாதானமாக பேசி பிரித்து எடுப்பது என்றால் பிரச்சினை இல்லை. இதற்கு உரிமை கோர வருவது என்றால் நாங்கள் தான் இவ்விடத்தில் வாழ்கின்றோம் என்ற அத்தாட்சிகள் தந்தார்கள். நாங்கள் அவர்களுக்கு எழுதி இருக்கின்றோம் சட்டத்தை நாடி இதன் உரிமை யாருக்கு என்று நீதிமன்றம் தீர்மானிக்கட்டும். இந்தச் சிக்கல்கள் இருப்பதனால் சில விடயங்களை வெளியில் இருந்து பார்க்கும் போது நாம் செய்யலாம் என்று இருக்கும் ஆனால் நாம் ஒரு முடிவு எடுத்தால் அந்த முடிவுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படும் போது அதை நியாயப்படுத்தக்கூடிய இடத்தில் இருந்துதான் செய்யலாம்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, ஒரு இடத்தில் டயலொக் Tower அல்லது வேறு ஏதாவது வழங்குனர்களின் Tower இருக்கின்ற போது அண்மையில் உள்ளவர்களுக்கு அதனால் ஏதாவது பாதிப்பு ஏற்படுமா?

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இதில் இரண்டு கருத்து இருக்கின்றது. ஒன்று Tower என்பது Signal limit பன்ற இடம் ஒன்று. இன்னும் அதனால் இறுதியாக மனிதர்களுக்கு பாதிப்பு ஒன்று என்று அறிக்கை இல்லை. மற்றது மின் வெட்டுகின்ற நேரம் Tower கள் மின்னை எடுத்து நிலத்திற்குள் பாய்ச்சும். நமக்கு பின்னாலும் ஒன்று இருக்கின்றது. அதனால் நேரடியாக பாதிப்பு என்று இன்னும் ஒருவரதும் அறிக்கை இல்லை.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, அப்படியானால் அருகில் இருப்பவர்கள் எதிர்க்க வேண்டிய அவசியம் இல்லையே?

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
TRC இன் அனுமதிக்கு அது உயரம் என்பதால் சில நேரம் மேலுக்கு வேலை செய்யும் போது விழுந்து ஆபத்து வரும் என்பதற்காக அதை சுற்றி இருப்பவர்களின் அனுமதி தேவை. அது ஒரு நிபந்தனை.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, அதே நிலமை சென்னல் கிராம சந்தைக்கும் வரலாம் தானே?

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
ஆட்சேபணை வந்தால் செய்ய இயலாது.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, பொதுமக்கள் நெருக்கமாக குடியேறாவிட்டாலும் எதிர்காலத்தில் சந்தை வளவிற்கு அண்மையில் குடியேறுகின்ற போது நாங்கள் அமைத்தால் பிரச்சினை வராதா?

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இதில் பிரச்சினை என்னவென்றால் நமது நோக்கம் ஒரு தேவை ஒன்று இருக்கின்றது. தேவை என்னவென்றால் அந்த பிரதேசத்திற்கு Signal ஒழுங்காக வழங்கப்பட வேண்டும். அதற்கு நமக்கு இயலுமான உதவிகளை செய்ய வேண்டும். இரண்டாவது நமக்கு வருமானம் கிடைக்கின்றது. ஆனால் அதற்கு மேல் சட்டத்தில் தடைகள் வந்தால் அதை ஒன்றும் செய்ய இயலாது.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, வருமானம் என்பதை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டால் சந்தைக்குரிய கட்டடத்தை கட்டினாலும் வருமானம் எடுக்கலாம்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கட்டடம் கட்டுவதற்கு பணம் இல்லை. இது 138 பேர்ச் வளவு. அதில் 20 பேர்ச் பிரச்சினையாக வராது.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நாசரின் விடயம் என்னவென்றால் கேட், முகப்பு எல்லாம் எடுத்து செய்யப்பட்டது. Tower அடிப்பதற்கு கேட்டதன் பொறாமையின் விளைவு தான் இது. அவருக்கு ஒரு வருமானம் வரும் என்றதனால் அதை சுற்றி இருப்பவர்களே ஒப்பம் வைக்கவில்லை. இது வேறு ஒரு சம்பவம். வேறு எங்கோ இருந்தவர்களின் ஒப்பத்தை எடுத்து வந்து செய்திருக்கின்றார். நாங்கள் கொடுத்த தீர்மானம் நீங்கள் இரண்டு பேரும் எழும்பி முழிக்கின்றவர்கள். இரண்டு பேரும் ஒற்றுமையாக இருக்க வேண்டும். ஒரு தாய் வயிற்றுப் பிள்ளை. அந்த குடும்பத்தை வழிநடாத்துகின்ற வாஹிட் சேர் அவர்களின் வீட்டையும் சென்று கதைத்தேன். எப்படியாவது சமாதானமாக்கி விடுங்கள் என்று, மூத்த சகோதரியின் கணவர் ஒத்துக் கொள்ளவில்லை. Tower அடிப்பது என்று வந்ததன் பின்னர்தான் இவர்களுக்குள் பிரச்சினை வந்தது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இது எந்தளவுக்கு என்றால் பின் வீட்டுக்கு முன்வளவால்தான் நீர் இணைப்பு சென்றது. சண்டை ஏற்பட்டு நீர் இணைப்பு உடைக்கப்பட்டு அதற்குப் பின்னர் Water Board திருத்தச் சென்றவுடன் அதை வளவுக்குள் விடவில்லை. அதன் பின்னர் பாதையால் அதற்கு இணைப்பு எடுத்தது. ஆரம்பத்தில் வந்தவுடன் இரண்டு சகோதரிகள் முடித்திருக்கின்றீர்கள். அந்தப் பிள்ளைகள் தொடர்ந்து உங்களது வீட்டிற்குள் தான் இருந்திருப்பார்கள். இதை விட்டுக் கொடுப்போடு சமரசமாக முடிக்காவிட்டால் சட்டப்படி சென்றால் இரண்டு பேரும் வெறுப்போடுதான் வாழப் போகின்றீர்கள்.

**கௌரவ உப தவிசாளர் ஏ. அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நமது சபைக்கு வந்த விடயம். புஷ்ராப் பள்ளிவாசலுக்கு முன்னால் உள்ள கடைக்காரர் அவர் எல்லா அனுமதியையும் பெற்று கடைக்கு என்று எடுக்கவில்லை. வீட்டுக்குதான் எடுத்தது. பரப்பு கொட்டப்போனவுடன் பிரச்சினை வந்தது. நான் அவர்களை அழைத்து சொன்னேன் நீங்கள் இரண்டு பேரும் குடும்பம் இல்லாவிட்டாலும் எவ்வளவு பணத்தை செலவளித்தாலும் காலையில் எழும்பி அவரின் முகத்தில் தான் முழிக்கின்றீர்கள். இதில் இறுதியாக வந்த தீர்மானம் என்னவென்றால் 10 இலட்சம் அவர்கள் கேட்டு 05 இலட்சம் பணத்தை எனது முன்னிலையில்தான் இவரது பிள்ளைகள் யாருக்காவது கொடுத்தாலும் பிரச்சினை வரக் கூடாது என்று அந்தப் பிரச்சினையை தீர்த்து, அதற்கு உண்மையான காரணம் நீங்கள் கடையை திறந்தாலும் அவரின் முகத்தில்தான் முழிக்க வேண்டும். உனக்கு வயிற்றுவலி வந்தாலும் அர்தான் வரப்போகின்றார். இது அந்நியக் குடும்பங்கள். ஆனால் இது ஒரே குடும்பம்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நாம் சட்டத்திற்கு முரணாக செய்ய இயலாது. குழு ஒன்றை நியமிப்போம். இதில் அவர் சார்பாக கதைத்தவர்கள் இருக்கின்றீர்கள்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நான் அவருக்கு சார்பாக இவருக்கு சார்பாக கதைக்கவில்லை. நான் நடுநிலையாகத்தான் கதைத்தேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நான் உங்களை சொல்லவில்லை. நாசரின் பிரச்சினையைப் பற்றி ஒருவரும் என்னிடம் கதைக்க தேவையில்லை ஏனென்றால் அவ்வளவு நெருக்கமாக பழகினோம். எனக்கு ஒரு மனசாட்சி ஒன்று இருக்கின்றது. நான் சட்டத்திற்குள் இருக்க வேண்டும். நான் விரும்பியது மாதிரி செய்ய இயலாது.

**கௌரவ உறுப்பினர் யூ.எல்.அஸ்பர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, சொல்லப்படுகின்ற மாதிரி குழு அமைத்து நாங்கள் பார்வையிட்டு ஒரு இணக்கப்பாடு செய்வதற்காக சபைக்கு நாசரையும் நாசரின் சகலனையும் அழைத்தோம். அந்த நேரம் நாசர்தான் வந்தார் அவரின் சகலன் வரவில்லை. அடுத்தது அவரது சகலனின் பாதையை பாவிக்கிறார் என்ற ஒரு குற்றச்சாட்டு. ஆனால் நாசர் திருமணம் முடித்துக்கு செல்வதற்கு முன்னரே அந்தப் பாதையில் கேட் வைக்கப்பட்டிருக்கின்றது. அந்தப் பாதையால்தான் அவர் போக்குவரத்து செய்திருக்கின்றார். Building Approval கொடுத்ததிலும் அந்தப் பாதையை சுட்டிக் காட்டியிருக்கின்றது. அதன் பின்னர் இவர்களுக்குள் பிணக்குகள் ஏற்பட்டு Tower வருவதற்கு இவர்கள் மறுப்பு தெரிவித்ததற்கு பின்னர் சபையால் முறைப்பாடு செய்யப்பட்டு பொது மக்களை அழைத்து அவர்களிடம் பேசி அவரிடம் ஒப்புதல் எடுக்கப்பட்டு இருக்கின்றது. அதற்குப் பின்னர் மறுப்பு தெரவித்தால் நியாயாம் இல்லாத ஒன்று.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இரண்டு பக்கமும் பிரச்சினை என்னவென்றால் அடிப்படை சொந்தப் பிரச்சினை. இதை கௌரவ உறுப்பினர் கோவிந்தசாமி, கௌரவ உறுப்பினர் பௌசுள்ளாஹ், கௌரவ உறுப்பினர் யூசுப் லெப்பை, கௌரவ உறுப்பினர் நளீம், கௌரவ உறுப்பினர் அன்வர் என்பவர்கள் சேர்ந்து ஒரு குழுவை உருவாக்கலாம்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இந்த விடயத்தில் பிரதேச சபை, பிரதேச செயலகம் இரண்டுமே பிழை செய்திருக்கின்றது என்பது ஊர்ஜிதமான விடயம்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நான் எந்த விடயத்தையும் ஆழமாக படிக்கின்றவன். இந்த வீடு அனுமதித்தது சபை இல்லாத காலத்தில். ஒரு ஒழுங்கையில் ஒரு வீட்டுக்கு சட்டபூர்வமாக வழி இல்லாத வளவுக்கு முகப்பு கொடுப்பது என்றால் இந்தப் பாதை உரித்தான வளவின் அனுமதி இல்லாமல் செய்ய இயலாது. அந்தக் கடிதம் ஒன்று File இல் இல்லை. அது இல்லாமல் எப்படி அனுமதி கொடுத்திருக்கின்றது என்பது ஒரு கேள்விக்குறி. COC நாம் கொடுத்தோம். தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் சென்று மேற்பார்வை செய்தவுடன் தன்னுடைய Plan இற்கும் கட்டுப்பட்டதற்கும் வித்தியாசம்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, மேற்பார்வை செய்ய வேண்டி வந்துவிட்டது. ஆரம்பத்தில் பார்த்திருந்தால் அந்தப் பிழை வந்திருக்காது. ஆகவே சபையும் இந்த விடயத்தில் பிழை செய்திருக்கின்றது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நீங்கள் விளங்க வேண்டும். நாம் வேலை செய்யும் எல்லோரும் மனிதர்கள். தவிசாளரோ, செயலாளரோ சென்று Plan, வீட்டை பார்ப்பதில்லையே, ஒரு குழு ஒன்று இருக்கின்றது. தொழில்நுட்ப உத்தியோகத்தர் அறிக்கை செய்து PHI அறிக்கை செய்து UDA பார்த்துதான் ஒப்பம் இடப்படுகின்றது. கொழும்பில் கௌரவ உறுப்பினர் மாஹிர் அவர்களுக்கு தெரியும் COC எடுக்காமல் ஒன்றுமே செய்ய இயலாது. COC கட்டாயம் எடுக்க வேண்டும். ஆனால் இந்த ஊரில் COC உம் எடுக்கத் தேவையில்லை. Building Line உம் எடுக்கத் தேவையில்லை. மற்ற எல்லாம் எடுக்கலாம்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, அமைத்த இந்தக் குழுவோடு சம்மாந்துறை பிரதேச செயலகத்திற்குரிய LO, இணக்க சபையில் இருந்து ஒருவரையும், நீதிமன்றம் சம்மந்தமான ஒருவரையும் எடுத்து சமரசமான ஒரு பேச்சுக்கு போவோம்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அத்தோடு அந்தப் பகுதிக்குரிய கிராம உத்தியோகத்தர், LO, பள்ளித் தலைவரையும் உள்வாங்கி, கௌரவ உறுப்பினர் சட்டத்தரணி முஸ்தபா, பெண்கள் சார்பாக கௌரவ உறுப்பினர் நிலுவ்பா அவர்களையும் சேர்த்து ஒரு குழு அமைப்போம்.

**கௌரவ உறுப்பினர் யூ.எல்.அஸ்பர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இவர்கள் ஒரு குடும்பம். அவர்களை சமரசப்படுத்த வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அந்த நோக்கத்தோடுதான் இந்தக்குழு இயங்க வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் யூ.எல்.அஸ்பர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, எவருக்கும் பக்க சார்பு இல்லாமல் அதை செய்யுங்கள்.

**கௌரவ உறுப்பினர் எம்.ரீ.பௌசுள்ளாஹ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இதில் இயங்குவது என்றால் இரண்டு பேரும் சமாதானத்திற்கு உடன்பட வேண்டும். ஏற்கனவே இது சம்மந்தமாக சென்று பேசி Tower வைப்பதற்கு எழுத்து மூலமாக வந்து ஒப்பமிட்டு சென்றவர் மீண்டும் வந்து சண்டை போடுகின்றார். இரண்டு பேரும் சமாதானமாக வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் யூ.எல்.அஸ்பர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, அவர்கள் நீதிமன்றத்திற்கு சென்று சமாதானமாகி வந்துவிட்டார்கள்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நாம் அந்த அடிப்படையில் செல்வோம்.

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ்.சரீபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நாசரின் பிரச்சினைக்கு சுட்டிக்காட்டவில்லை என்னவென்றால் சாரதி சில விடயங்களில் வழிநடாத்துகின்றார் என்பதில் நான் உடன்படுகின்றேன். ஏனென்றால் நான் நேரில் அவதானித்த விடயம். உங்களிடம் சென்றமாதம் மாற்றுத்திறனாளி மன்சூரா என்பவர் உங்களை சந்திக்க வந்தார். நானும் வந்த நேரம் நீங்கள் தொலைபேசியில் பேசிக் கொண்டிருந்ததால் முன்னுக்கு இருந்தேன். அந்த நேரம் அந்தப் பிள்ளை உங்களை சந்தித்து வெளியில் வந்தவுடன் அந்தப் பிள்ளை இருக்கும் போது பிரதம முகாமைத்து சேவை உத்தியோகத்தர் மஜீட் அவர்களை அழைத்து இந்தப் பிள்ளை சம்மந்தமான விளக்கத்தை கொடுக்கின்றீர்கள். அந்தப் பிள்ளை வெளியில் சென்றுவிட்டார். CC வெளியில் வருகின்றார் அந்த இடத்தில் சாரதி ஜெமீல் அவ்விடத்தில் இருந்துவிட்டு CC இடம் ஏன் அவர் வந்த என்று, CC அதற்கு விளக்கம் கொடுக்கின்றார். நான் அந்த நேரம் கேட்டேன் இதற்குதானா உங்களை வைத்திருக்கின்றது என்று CC இடம் கேட்டேன். இவர் CC இன் வீட்டிற்கு சென்று இந்தக் கடிதத்தை அனுப்பியாச்சா என்று கேட்கின்றார். நான் ஆதாரமாகச் சொல்கின்றேன் இந்த விடயத்தில் இது இணக்க சபையில் இருந்த அவரின் சகலன் சபீக் இடம் எனது இணக்க சபை கடிதத்தை கேட்டிருக்கின்றார். என்னுடைய பாதைக்கும் இவருக்கும் சம்மந்தமே இல்லை. இன்றைக்கு அது பொதுப்பாதை என்று பிரதேச செயலகத்தால் நான் விரும்பிய இடத்தில் கேட் வைக்கலாம் என்று கடிதம் வந்தும் இதற்கு உந்துதலாக இருந்த அந்த பெண்மனியை உள்ளாக்கியவர் இந்த சாரதி ஜெமீல் என்பதை ஆதாரமாக சொல்கின்றேன். அரசாங்கத்தின் கட்டடத்தை என் கண் பார்க்க உடைக்கின்றார். பாலத்திற்கு கீழ் உடைப்பதை உடனே அறிவிக்கின்றேன். இதை வைத்துதான் நமக்கு ஒரு கறுப்புப் புள்ளி. நீங்கள் அவருக்கு ஆதரவு.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கௌரவ உறுப்பினர் அவர்களே, நீங்கள் சொல்கின்றீர்கள் நான் ஆதரவு என்று, நான் சாரதிகளோடு ஊழியர்களோடு சபை விடயங்களை கலந்துரையாடுவதில்லை.

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ்.சரீபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நீங்கள் இல்லை. நாம் எல்லோரும் ஆதரவு. இது வெளியில் ஒரு கறுப்புப் புள்ளி. இந்த பிள்ளையிடம் நடந்த விடயத்தை இவரிடம் CC சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. இவர் கேட்க வேண்டிய அவசியம் இல்லை. இப்படி என்றால் செயலாளருக்கு ஒரு அறை தேவையில்லை. தவிசாளருக்கு என்று ஒரு அறை தேவையில்லை. பகிரங்கமாக வைத்து இந்த விடயத்தை முடிக்கலாம்.

**கௌரவ உறுப்பினர் ஏ.சீ.எம்.சஹீல் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இன்று சபையிலே பல தீர்மானங்களை எடுத்திருக்கின்றோம். கட்டுக்கடங்காமல் பாதைகளிலே அங்காடி வியாபாரிகளுடைய வியாபார நடவடிக்கைகள் அதிகமாக காணப்படுகின்றது. குறிப்பாக பௌஸ் மாவத்தையை எடுத்துக் கொண்டால் பௌஸ்மாவத்தை வீதியிலே 4, 5 மீன் சந்தைகள். அதே போன்று சியா சந்தியை எடுத்துக் கொண்டால் முக்கிய சந்திகளிலே மீன் வியாபாரம். இவ்வாறு கட்டுக்கடங்காமல் இந்த ஊரிலே வியாபாரம் நடக்குமானால் பொதுமக்கள் பல அசௌகரியங்களை இன்று விபத்துக்கள் ஏற்படக் கூடியதாகவும் இருக்கின்றது. இந்த காலகட்டத்திலே எங்களுக்கு ஒரு பாரிய பொதுச் சந்தை இருக்கின்றது. அந்தப் பொதுச் சந்தை இருக்கின்ற போது இன்று தெருவோரங்களிலே வியாபார மையங்களை அமைத்துக் கொண்டு வியாபாரங்களை நடத்தி வருகின்றார்கள். ஆனால் இந்த சபையிலே பல தீர்மானங்களை மேற்கொள்கின்றோம். ஆனால் நடந்த நடவடிக்கைகள் என்ன? எங்களுடைய தவறா அல்லது அதிகாரிகளுடைய தவறா என்று கூட தெரியாமல் இருக்கின்றது. ஆகவே இந்த ஊரின் மகிமையை கருதி சந்தைகளை அகற்றுவதற்கு இந்த சபை முன் வர வேண்டும். அவர்களுடைய வாழ்வாதாரங்களை கருத்திற் கொண்டு பல சலுகைகளை கொடுத்திருந்தாலும் ஆனால் இன்று சம்மாந்துறையிலே அதிகமாக மீன் வியாபாரிகளினுடைய சந்தை அதிகமாகவே காணப்படுகின்றது. ஒரு சந்தையாக இருந்தது 05 சந்தையாக மாறியுள்ளது. இந்த விடயத்திலே எமது சபை கருசணை கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

அதே போல் எமது சம்மாந்துறை மண்ணிலே இளம் சாதனையாளர்கள் இன்று பல்வேறு சாதனைகளை நிகழ்த்தி வருகின்ற காலகட்டத்திலே இன்று ஸ்கொட்லாந்து சங்க இலக்கிய ஆய்வு நடுவகம் நடாத்திய Online மூலமான பேச்சுப் போட்டியிலே உலகளாவிய ரீதியிலே 03 வெற்றியாளர்கள் இலங்கையிலே குறிப்பாக சம்மாந்துறையிலே 03ம் இடத்தை தழுவியுள்ளார்கள். அவர்களுக்கு இந்த சபை சார்பான எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன். அதே போன்று எமது வட்டாரத்திற்கு அண்மையான வட்டாரமான விளினியடி வட்டாரத்திலே 6 – 10 வயதிற்குட்பட்ட பேச்சுப் போட்டியிலே பல சாதனைகளை அந்த மாணவி நிகழ்த்தி இருக்கின்றார். 7 தொடக்கம் 10 வயது வரைக்குமாக பல்வேறு சாதனைகளை அவர் செய்திருக்கின்றார். சாரணியத்திலும் சரி அவருடைய பிரதேச மட்டத்திலே அதே போன்று மாகாண மட்டத்திலே பல சாதனைகளை நிகழ்த்தி இருக்கின்றார். ஆகவே அவருக்கும் எமது சார்பான வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டு ஏனைய இரு மாணவர்களுக்கும் இவ் இடத்திலே வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
மீன் வியாபாரம் பாரிய ஒரு சவாலாக வருகின்றது. மீயன்னா சந்தி ஓரளவுக்கு அந்த கடைக்காரர்கள் ஆக்கிரமித்து கட்டைகள் போட்டதால் சந்தியில் இல்லை. ஆனால் அலிவன்னியார் வீதியிலும் விற்கப்படுகின்றது. இதற்கு பொருளாதாரத்தடை தான் காரணம். இதை பொதுவாக தடை செய்வது என்பது ஒரு சவால். நாம் Open Market Tender ஒன்று கொடுத்திருக்கின்றோம். அதே நேரம் அரபா பாடசாலை வீதியில் எத்தனையோ தடவை முயற்சி செய்திருக்கின்றோம் அகற்றுவதற்கு ஆனால் அவ்விடம் செப்பலி மீன் வாங்குவது என்றால் ஒன்று சந்தைக்குள் வர வேண்டும் இல்லாவிட்டால் அவ்விடத்தில் வாங்க வேண்டும். இது பரவிக் கொண்டு செல்கின்றது. எந்த முறையில் நாம் தீர்மானம் எடுப்பது. தீர்மானம் எடுத்து பொலீஸ் இற்கும் PHI இற்கும் அனுப்பும் போது அதை செயற்படுத்தக் கூடியதாக இருக்க வேண்டும். அது மீண்டும் நமது தலையில் வரக்கூடாது. இதை தடை செய்வதற்கு பொலீஸ் இற்கும் PHI இற்கும் தான் அதிகாரம் இருக்கின்றது. நாம் முடிவாக எடுத்து தெருவோரங்களில் விற்பனை செய்வதை தடை செய்வதற்கு, ஆனால் என்ன அடிப்படையில் என்பது எனக்கு இருக்கின்ற சவால்.

**கௌரவ உப தவிசாளர் ஏ. அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நமது காலத்திற்குள் இந்த சந்தை மூடக்கூடிய சாத்தியம் உண்டு. நான் ஒவ்வொரு நாளும் சென்று அவதானிப்பது 8, 9 மணிக்கு எல்லாம் மீன் வாங்கிய சந்தை தற்போது 12 மணி ஆகியவுடன் முன்னுக்கு எடுத்து வருகின்றார்கள். முடவர்ர சந்தியில் இருந்து சியா சந்தி வரை அதில் மீன்வியாபாரம், அடுத்தது விளினியடி இரு மருங்கிலும், ஜலாலியா பள்ளிவாசல் அருகில், கொச்சிக்காய்தூளர்ர சந்தியை விடலாம் ஏனென்றால் அவ்விடத்தில் ஒரு சந்தை இருக்கின்றது, அடுத்தது மீயன்னா சந்தி இவைற்றையல்லாம் பார்க்கும் போது நமக்கு நிரந்தர வருமானம் வருகின்ற கடைக்காரர்கள் ஒவ்வொன்றாக மூடப்பட்டு இருக்கின்றது. அதுமட்டுமல்லால் Entrance உடைந்து போக இயலாமல் இருக்கின்றது. கோழிக்கடை இலட்சக்கணக்கில் வருமானம் வந்த கடை இன்றைக்கு அவர்களை சந்தித்த நேரம் எவ்வளவு என்று கேட்டால் 500 ரூபா தந்தால் செய்யலாம் என்று, 1000 ரூபாவுக்கு தருவதாக பேசிய இரண்டு கடைகள் வார மாதிரி இல்லை. இந்த சந்தையை நமது காலத்திற்குள் உயிர்ப்பிக்க வேண்டும். இவர்கள் பொலீஸ் இற்கும் PHI இற்கும் கட்டுப்படாமல் எப்படி வியாபாரம் செய்வார்கள்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
என்ன அடிப்படையில் இந்த தீர்மானத்தை எடுக்கலாம். பொதுவாக தெருவோரங்களில் விற்க இயலாது. பிரதான வீதியில்தான் Open market Tender வருமானம் 80 இலட்சம். இதை எடுத்தால்தான் அவர்களுக்கு ஒரு வருமானம். ஆனால் ஒரு கட்டுப்பாடு வேண்டும்.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நமது சபைக்கு முன்னால் ஒரு சாய்ந்தமருது ஒருவர் மீன் விற்கின்றார். அது சரியா? அந்தக் கழிவை எவ்விடத்தில் போடுவார்கள். நமது சபைக்கு முன்னால் இருப்பதையே கட்டுப்படுத்த இயலாவிட்டால் எப்படி மற்றவைகளை கட்டுப்படுத்துவது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கட்டுப்படுத்த இயலாது என்று இல்லை. இதில் சமூகத்தின் பங்களிப்பு ஒன்றும் இல்லை. நாம் முடிவு எடுத்து எந்தப் பாதையோரமும் வியாபாரம் செய்ய இயலாது என்று பொலீஸ் இற்கு அறிவித்துவிட்டு அதை நடைமுறைப்படுத்துவோம். பொலீஸ் செய்யாவிட்டால் ASP இற்கு அறிவிப்போம். இதில் வருகின்ற பிரச்சினைகளை நீங்களும் முகங்கொள்ள தயாராக இருக்க வேண்டும்.

**தீர்மானம் - 04/55/14**
தெருவோரங்களில் விற்கின்ற மீன் வியாபாரிகள் தொடர்பில் பொதுச் சுகாதாரத்திற்கு பங்கம் விளைவிப்பதை கருத்திற் கொண்டு நடவடிக்கை மேற்கொள்ள MOH இற்கும், பொது போக்குவரத்துக்கு தடை ஏற்படுவதைத் தடுக்க OIC இற்கும் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கோர தீர்மானம்.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.சீ.எம்.சஹீல் |
| ஆமோதித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக அனுமதிக்கப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எஸ்.நிலுவ்பா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, எமது நாட்டில் மட்டுமல்ல இந்த உலகத்திலே எதிர் நோக்கிக் கொண்டிருந்த கொவிட் 19 இனால் எமது ஊர்களில் நடக்கின்ற சில நிகழ்வுகளை நடத்த முடியாமல் உள்ளது. எனவே எதிர்வரும் ஒக்டோபர் முதலாம் திகதி சர்வதேச முதியோர் சிறுவர் தினமாக இருப்பதனால் எமது சபை கலையாமல் இருந்தால் நமது சபை ஊடாக அத் தினத்தை கொண்டாடுவதற்கு அனுமதி தருமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, சென்னல் கிராமம் - 2ம் பிரிவில் உள்ள எமது பராமரிப்பில் இருக்கின்ற பாலர் பாடசாலை கட்டிடத்தின் ஒரு பகுதியை வாசிப்பு நிலையமாகவும் அங்கு இருக்கின்ற மாணவர்கள் கணணியில் கற்கக் கூடியதாக மாற்ற வேண்டும் சபையினால் ஒரு தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஏறத்தாள 8 சபைகள் கடந்திருக்கின்றது. இது சம்மந்தமாக எந்தவித முன்னெடுப்பும் இல்லாமல் இருக்கின்றது. எமது சபையும் கலையக்கூடிய சாத்தியம் இருக்கின்றது. அந்தக் கட்டடம் பெறுமதியான ஒரு கட்டடம். பாழடைந்த நிலையில் நாளுக்கு நாள் வருகின்றது. பாலர் பாடசாலை மாத்திரம்தான் நடைபெறுகின்றது மற்ற கட்டடம் வெறுமனே கிடக்கின்றது. நாளுக்கு நாள் பாழடைந்து வருகின்ற ஒரு சந்தர்ப்பம் இருக்கின்றது.

அத்தோடு கௌரவ தவிசாளர் அவர்களே, தீர்மானமாக எடுத்துவிட்டீர்கள். என்னிடம் குறுகிய யோசனை ஒன்று இருந்தது. மீன் வியாபாரிகள் சம்மந்தமாக எடுத்துக் கொண்ட முடிவு ஏற்கனவே பல சபைகளிலும் பேசி இருக்கின்றோம். இருந்தாலும் நாம் எடுக்கின்ற தீர்மானம் உள்ளூர் மீன் வியாபாரிகளை வீதிகளில் விற்காமல் அவர்களை கட்டுப்படுத்தி பொதுச் சந்தையிலே வந்து விற்பனை செய்ய வேண்டும் என்பதுதான். ஆனால் அவர்கள் முன்வைக்கின்ற கருத்து நாங்கள் சட்டரீதியாக அனுமதி பெற்ற மீன் வியாபாரிகள் பொதுச் சந்தைக்குள் வந்து மீன் விற்கின்றோம் வெளியூர்களில் இருந்து வெளியூர் ஆட்கள் ஊர்களிலும் சந்திகளிலும் விற்பனை செய்வதால் எங்களால் அந்த தொழிலை தொடர்சியாக செய்ய முடியாமல் இருக்கின்றது. எங்களுடைய மீன்களை விற்க முடியாமல் இருக்கின்றது என்ற கோரிக்கை மீனவர்கள் ஊடாக முன்வைக்கப்படுகின்றது. ஆகவே தெருக்களிலும் சந்திகளிலும் மீனை பாதையில் விற்காமல் ஆங்காங்கே சந்திகளில் மீன் கடைகளை உருவாக்கினால் என்ன?

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
வெட்டு மீன் இன்று சந்தைக்குள் தான் விற்கப்படுகின்றது. வீதியில் இருந்தால் அவ்விடத்தில் கூடி வாங்குகின்றார்கள் சந்தைக்குள் செல்வதை விடுகின்றார்கள்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, அதை இல்லாமல் ஆக்குவது என்றால் நாம் இறைச்சிக்கடை Tender பண்ணுகின்றோம். கோழிக்கடை Tender பண்ணுகின்றோம், ஆட்டிறைச்சிக் கடை இருக்கின்றது. அதே மாதிரி மீன் கடைகளை ஸ்தாபிப்பது. அதே நேரம் சபை நிதியால் ஏறத்தாள 1.5 மில்லியன் காசை செலவளித்து கொச்சிக்காய்தூளர்ர சந்தியில் இருக்கின்ற கடையை நாம் திருத்தி இன்றைக்கு அது பாழடைகின்றது. இறைச்சிக் கடை மாத்திரம்தான் அதில் நடைபெறுகின்றது. அவ்விடத்தில் வியாபாரம் செய்பவர்களை மாத்திரமாவது முதற்கட்டமாக சந்தைக்குள் அனுப்பினால் எங்களுக்கு ஒரு பாரிய வெற்றி என்று நினைக்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இதை செய்தும் மக்கள் செல்லாததால் அவர்கள் மீண்டும் வெளியில் வருகின்றார்கள்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நாம் சொல்கின்றோம். 2, 3 நாட்களுக்கு செய்கின்றார்கள், 3வது நாள் வருகின்றார்கள்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நாம் அவர்களிடம் சொல்கின்றோம் அவர்கள் செய்கின்றார்கள். ஆனால் மக்கள் போகின்றார்கள் இல்லை.

**கௌரவ உறுப்பினர் எம்.ரீ.பௌசுல்ளாஹ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, மீயன்னா சந்தியில் இருக்கின்ற வளவை பேசி அதில் செயற்படுத்தலாம்.

**கௌரவ உறுப்பினர் யூ.எல்.அஸ்பர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, எங்களது ஊர் வரவழைத்து வாழ வைத்த ஊர். எங்களது ஊரில் இருக்கின்ற மீன் வியாபாரிகளாக இருந்தாலும் சரி, மரக்கறி வியாபாரிகளாக இருந்தாலும் சரி வெளியூர்களில் சென்று வியாபாரம் செய்ய இயலாது. எங்களது ஊரில் மாத்திரம்தான் எல்லோரும் வந்து விற்பனை செய்கின்றார்கள். அதனால் எங்களது வியாபாரிகள் சந்தைக்குள் சென்றால் வெளியூர் வியாபாரிகள் வெளியில் விற்றால் எப்படி விற்பது என்பதுதான் கேள்வி. வெளியில் இருந்து வருபவர்களை தடை செய்ய வேண்டும். அவர்கள் சந்தைக்குள் விற்பனை செய்ய வேண்டும் என்று கூற வேண்டும். அவ்வாறு இல்லாதவர்கள் வர இயலாது என்று ஒரு கட்டுப்பாட்டை விதிக்க வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, மீன் வியாபாரிகளுக்கு எரிபொருள் தட்டுப்பாட்டால் குறுகிய படகுகள் மீனுக்கு செல்வதால் எங்களது வியாபாரிகளுக்கு அங்கு சென்று மீன் எடுக்க இயலாத ஒரு நிலைப்பாடு இருக்கின்றது. ஆனால் அங்கு இருக்கின்ற வியாபாரிகள் மீனை எடுத்து வந்து ஆகக் கூடுதலான விலைக்கு விற்பனை செய்கின்ற சந்தர்ப்பமும் இருக்கின்றது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இந்த விடயங்களை நீங்கள் ஆழமாக படிக்க வேண்டும். நான் அடிக்கடி கடற்கரைக்கு செல்பவன். முந்தநாள் நான் கல்முனையில் இருந்து காரைதீவு வரைக்கும் காலை 11.00 மணி 11 மணிக்கும் கரவலை இழுபடுகின்றது. இந்த மீன் தான் வெளியூராட்கள் இங்கு எடுத்து வருவது. விடியற்காலை நமது ஆட்கள் சென்று அவ்விடத்தில் இருப்பதை எடுத்து வருவது. 2வது சுற்றில் வருவது தான் சாய்ந்தமருது சந்தைக்குள் இருக்கின்றது. இல்லாவிட்டால் பெண்கள் சந்தைக்குள்தான் இருக்கும். 11 மணி, 12 மணிக்கு அதனால் போக இயலாமல் இருக்கும். அவ்வளவு பைசிக்கிள். நான் படிப்பதற்காக நான் பார்த்துவிட்டு வருவது. வெளியூர் வியாபாரிகளை தடை செய்யலாமா? மறைமுகமாகத்தான் தடை செய்யலாமே தவிர நேரடியாக செய்ய இயலாது. நாம் நமது மீன் வியாபாரிகள் அனைவருக்கும் அனுமதிப்பத்திரம் வழங்கி அனுமதிப்பத்திரம் உள்ளவர்கள் மாத்திரம்தான் ஊருக்குள் வியாபாரம் செய்யலாம் என்ற ஒரு சட்டத்தை கொண்டு வரலாம். வெளியாட்கள் வரும் போது அதனை வேறு வழியில் கையாள வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, தடை செய்ய இயலாது. தடை செய்தால் நமது ஊராட்கள் வெளியூர்களில் மீன் எடுக்க போக இயலாது. ஆகவே அவர்கள் சந்தைக்குள் வந்து விற்கலாம். அல்லது நாம் அடையாளப்படுத்துகின்ற இடத்தில் விற்கலாம். நமது மீனவர்களின் கருத்தும் என்னவென்றால் இவர்கள் ஊருக்குள் சுற்றி விற்பதனால் எங்களுக்கு சந்தைக்குள்ளோ வெளியிலோ விற்க இயலாமல் இருக்கின்றது.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இந்த விடயத்தில் Mobile Service நடக்கட்டும் குறிப்பட்ட இடத்தில் வைத்திருப்பதுதான் பிரச்சினை.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அதை தடை செய்ய இயலாது. வீதியோரம் நின்று செய்கின்ற வியாபாரம் செய்ய இயலாது.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, ஆலையடிச் சந்தையில் இருக்கின்ற இறைச்சிக்கடை ஏதோ ஒரு காரணத்தால் மூடப்பட்டு இருக்கின்றது. அதை இறைச்சிக் கடையாக அல்லது வேறு ஒரு கடையாக அமைக்கலாம்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நாம் மூடவில்லை. ஒருவரும் எடுக்கவில்லை. இறைச்சிக்கடையாகத்தான் செய்தது அதை எடுக்கவில்லை. நாம் தீர்மானத்தில் இறைச்சிக் கடை இல்லாமல் வேறு ஒரு கடை என்றால் அதை கொடுக்கலாம்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, புதிதாக எடுக்கப்பட்டுள்ள விளையாட்டு மைதானம் அதனுடைய வடக்கு மற்றும் மேற்கு எல்லைகளை ஸ்தாபிக்கக்கூடிய வகையில் மரக் கன்றுகளை நட வேண்டும். நாம் சாதாரணமாக மரக்கன்றுகளை நடுகின்ற வகையில் அதனை நட இயலாது சதுப்பு நிலமாக இருக்கின்றது. ஆகக்குறைந்தது 1 மீற்றர் உயரத்திலையாவது நட வேண்டும். வெறுமனே மரக் கூடு கட்டி வைக்க முடியாது. ஒரு கொட்டு வைத்து மண் நிரப்பி அதன் மேல் கன்று வைத்து அதன் பின்னர்தான் கூட்டை வைக்க வேண்டும். பாதுகாப்பதற்கு ஒரு காவலாளியும், நீர் வசதியையும் ஏற்படுத்த வேண்டும். எல்லையை அடையாளப்படுத்த வேண்டும். சிலநேரம் நமது மைதானத்திற்கு மண் இட்டு நிரப்புகின்ற சந்தர்ப்பம் வந்தால் மரக்கன்றுகள் கீழுக்கு போகக்கூடாது. அதை நான் முன் நின்று செய்யக்கூடிய ஏற்பாட்டை எடுக்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அதை பாரமெடுத்து செய்யுங்கள்.

**கௌரவ உறுப்பினர் கே.எல்.சிஹாமா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, Road Inventory விளக்கமாக நான் கதைப்பது என்னவென்றால் Road Inventory சம்மந்தமாக ஏற்கனவே ஒரு குழு அமைத்து, அதில் பொதுமக்களையும் அழைத்து ஏகமனதாக முடிவெடுத்த சம்மாந்துறை 1ம் குறுக்குத் தெருவை Girl School Road என்று பின்னர் Proposed Name Hon Members என்று போட்டு கண்ணாடி மரைக்கார் வீதி என்று மீண்டும் எழுதப்பட்டிருக்கின்றது. அது எந்த சந்தர்ப்பத்தில் எழுதப்பட்டது என்று விளங்கவில்லை.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நான் சொன்னேன் நடந்தவைகளை விட்டுவிட்டு நீங்கள் இவைகளை எடுத்து வாருங்கள். முதல் 1ம் குறுக்குத் தெருவாக இருக்க வேண்டும் என்று இருந்தது. அதற்குப் பின் இன்னுமொரு பெயர் முன்மொழியப்பட்டது. அதற்குப் பின் கண்ணாடி மரைக்கார் என்று வந்தது. இவை எல்லாவற்றையும் விட்டுவிட்டு கடைசியாக இருந்து எடுத்து வந்து இறுதிக் கூட்டத்தில் தீர்மானத்தை எடுத்து முடிங்கள். எல்லோரும் இருந்து முடிவெடுக்க வேண்டும். இல்லாவிட்டால் குற்றச்சாட்டு வரும்.

**கௌரவ உறுப்பினர் யூ.எல்.அஸ்பர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, ஒரு வட்டாரத்தில் 02 உறுப்பினர்கள் இருப்பார்கள். தனித்தனியாக அவர்களது அபிப்பிராயங்களை வைக்காமல் சேர்ந்து முன்வைக்க வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் கே.எம்.இன்பவதி அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, மல்வத்தை வைத்தியசாலை பிரதேச வைத்தியசாலையாக தரம் உயர்த்தப்பட்டிருக்கின்றது. அங்கு மூவின மக்களும் வருகை தந்து சிகிச்சை பெறுகின்றார்கள். நாள் ஒன்றுக்கு 100 பேருக்கு சிகிச்சை வழங்கப்பட்டு வருகின்றது. குளிசைகள் கடதாசியில் மாத்திரைகள் வழங்கப்பட்டு வருகின்றது. எமது சம்மாந்துறை பிரதேசத்தில் 03 வைத்தியசாலைகள் இருக்கின்றது. சென்னல் வைத்தியசாலை, சம்மாந்துறை வைத்தியசாலை, அதே போன்று மல்வத்தை வைத்தியசாலை இருக்கின்றது. எனவே மாத்திரை வழங்கும் பக்கெட் வழங்குவதற்குரிய அனுமதியை கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அதற்குரிய தீர்மானமாக எடுப்போம்.

**தீர்மானம் - 04/55/15**
மல்வத்தை வைத்தியசாலைக்கு மாத்திரை வழங்கும் பக்கெட் வழங்குவதற்கான தீர்மானம்.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | கே.எம்.இன்பவதி |
| ஆமோதித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக அனுமதிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/55/16**
தற்காலிக அடிப்படையில் கடைமயாற்றும் ஊழியர்களின் சேவைக்காலத்தினை 2022.07.01 ஆந் திகதியிலிருந்து 06 மாதங்களுக்கு நீடிப்பதற்கான தீர்மானம்.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.நளீம் |

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக அனுமதிக்கப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் ஏ.யூசுப்லெப்பை அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, 04வது சபையின் 54வது அமர்வில் 07வது தீர்மானமாக இந்த நாட்டின் ஜனாதிபதி கௌரவ ரணில் விக்ரமசிங்க அவர்களுக்கு வாழ்த்து தெரிவித்து கடிதம் அனுப்பி இருக்கின்றீர்கள். அதற்காக நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

கடந்த 06 ஆந் திகதி ஐக்கிய தேசியக் கட்சியின் 76வது ஆண்டு நிறைவு விழாவில் ஏனைய எமது நாட்டில் அங்கத்துவம் பெறுகின்ற கட்சிகளின் தலைவர்களும் அங்கம் வகித்தார்கள். இன்று கட்சி என்று பார்ப்பதை விட இந்த நாட்டின் ஜனாதிபதி என்ற அடிப்படையில்தான் கௌரவ ரணில் விக்ரமசிங்க அவர்களை உற்றுநோக்க வேண்டியதாக இந்த நாட்டு மக்கள் இருக்க வேண்டும் என்பது எனது கருத்து. ஏனென்றால் அந்த விழாவில் கௌரவ ஜனாதிபதி அவர்கள் பொதுவாக இந்த நாடு எந்த நிலையில் இருந்தது. அதை எந்த நிலையில் அவர் பாரமெடுத்தார். எவ்வாறு இந்த நாட்டை கொண்டு செல்ல வேண்டும். எதிர்கால இளம் சமுதாயத்திற்கு இந்த நாட்டை எந்த அடிப்படையில் ஒப்படைக்க வேண்டும் என்கின்றதை மிகத் தெளிவாக கட்சித் தலைவர்கள் மத்தியில் அவர் பேசியிருந்தார். அந்த அடிப்படையில் இன்று நாடு ஒவ்வொரு வாக்காளர்களும் 10, 11 இலட்சத்திற்கு கடனாளியாக இருக்கின்றது. இதனை இல்லாமல் செய்து எதிர்காலத்தில் கடனற்ற நாடாக இந்த நாட்டை ஏற்பாடு செய்து எதிர்கால இளைஞர் சமுதாயத்தினரிடம் கடனற்ற நாட்டை ஒப்படைப்பதுதான் அவரது கடமையாக இருக்கின்றது. அதற்காக அவர் வேலைத்திட்டத்தினை நாடளாவிய ரீதியில் முன்னெடுக்க இருக்கின்றார். அதற்கு நாட்டு மக்கள் அனைவரும் ஒத்துழைப்பை கேட்டிருக்கின்றார். அந்த அடிப்படையில் நாங்களும் மக்கள் பிரதிநிதியாக இந்த சபை இருக்கின்றது. அதே நேரத்தில் நாங்களும் அவர்களும் இணைந்து செயற்படுவதன் மூலம் குறிப்பாக வடகிழக்கில் அபிவிருத்தி என்றால் உள்நாட்டு உற்பத்தி சம்மந்தமான அபிவிருத்திகள் அப்படிப்பட்ட அபிவிருத்தி திட்டங்களை எடுப்பதாக கூறியிருக்கின்றார். அந்த அடிப்படையில் நாங்கள் கௌரவ ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்களோடு இணைந்து இந்த நாட்டை முன்னேற்றுவதற்குரிய பங்களிப்பை இந்த சபை கௌரவ தவிசாளருடன் இணைந்து செயற்படுவது அவசியம் என நான் கருதுகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ்.சரீபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, வாசிகசாலை சம்மந்தமாக நான் ஏற்கனவே செயலாளரிடம் கூறியிருக்கின்றேன். சென்னல் வாசிகசாலையில் என்னையும் ஒரு அங்கத்தவராக அறிவித்திருக்கின்றீர்கள். மிகவும் கவலையான விடயம் அந்த வாசிக சாலைக்கு என்று ஒரு ஊழியர் போடப்பட்டிருக்கின்றது. நூலகர் போடப்பட்டிருக்கின்றது. ஆனால் நான் அங்கு செல்கின்ற நேரத்தில் நூலகரும், ஊழியரும் இயங்குவதாக தெரியவில்லை.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அவர்கள் இல்லாவிட்டால் உடனே அறிவிக்க வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ்.சரீபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நூலகத்தைச் சுற்றி காடு பிடிக்குது என்றால் அங்கு ஒரு ஊழியர் இருந்தால் அவர் என்ன செய்கின்றார். அதை சுத்தம் செய்கின்றார் இல்லை. அவரும்கு சம்பளம் கொடுக்கத் தேவையில்லை. அந்த இடத்திற்கு கௌரவ தவிசாளர் அவர்கள் ஒரு கல்வி அறிவை மேம்படுத்தக் கூடிய நூலகரை நிறுவி நல்ல ஒரு உதவியாளரையும் நியமிக்க வேண்டும்.

S24 வாய்க்காலும், பாதையும் அந்தப் பாதை மிகவும் சீரழிந்து கொண்டிருக்கின்றது. கம்பிகள் வெளியில் வந்திருக்கின்றது. அந்த வளைவில் பைப் வெடித்து எந்த நேரமும் தண்ணீர். அதில் அதிகமானவர்கள் விழுகின்றார்கள். அந்த வீதியில் இருக்கின்ற மின்விளக்கை நிமிர்த்தி போடுங்கள் என்று எத்தனையோ தடவை சுபைதீனிடம் சொன்னேன். செயலாளர் சொல்லியும் அதனை இன்னும் செய்யவில்லை. பாதை விடயத்தோடு நீர்ப்பாசன செலவு இருக்கின்றது என்னவென்றால் மாதா மாதம் வாய்கால் அருகே சுத்தம் செய்வது. அது மிக நீண்ட காலமாக நடைபெறுவதில்லை. இதையும் கவனத்தில் கொண்டு நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு கடிதம் அனுப்ப வேண்டும் என்று கூறினீர்கள். அனுப்பினீர்களோ தெரியாது. இதை மீண்டும் ஞாபகப்படுத்துகின்றேன். பாதை சீர்திருத்தத்திலும் வாய்க்கால் சீர் திருத்தத்திலும் கவனம் எடுக்க வேண்டும். வாசிகசாலையிலும் நல்ல ஒரு நூலகரையும், உதவியாளரையும் நிறுவ வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இத்துடன் சபை அமர்வினை இனிதே முடித்துக் கொள்கின்றேன்.

A.M.முஹம்மட் நௌசாட்
தவிசாளர்
சம்மாந்துறை பிரதேச சபை

கௌரவ தவிசாளர்,
கௌரவ உப தவிசாளர் / கௌரவ உறுப்பினர்
சம்மாந்துறை பிரதேச சபை.

## கூட்டறிக்கை அனுப்புதல்

கடந்த 2022.09.13 ஆந் திகதி இடம் பெற்ற எமது 04வது சபையின் 55வது அமர்வின் கூட்டறிக்கை இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகின்றது. இக் கூட்டறிக்கையில் ஏதாவது திருத்தங்கள் இருக்குமாயின் எதிர்வரும் 2022.10.07 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்து மூலம் சமர்ப்பிக்குமாறு கௌரவ தவிசாளரின் கட்டளைக்கமைய கேட்டுக் கொள்கின்றேன்.

செயலாளர்
சம்மாந்துறை பிரதேச சபை